Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் - 15 | திருவள்ளுவர் ஆண்டு - 2035 | மார்கழி-06 | 21-12-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை - 307

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-40A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10930) T.P: 024-222 4247


# சமாதானப் பாதையைவிட்டு விலகிச்செல்லும் அரசிற்கெதிராக மனிதச் சங்கிலிப் போராட்டம்

## சாவகச்சேரியில் கைகோர்த்து நின்ற மக்கள்

**சமாதானத்தை வலியுறுத்தி தென்மராட்சியில் உள்ள பொது அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்ட வெகுசன எழுச்சிப் போராட்டத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டு சமாதானப் பாதையில் இருந்து விலகி யுத்த ஆயத்தங்களில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் சமாதா னத்தை வலியுறுத்தும் பதாதைகளைத் தாங்கியவாறு வீதிகளின் இருமருங்கிலும் கைகோர்த்து நின்று தமது கண்டனங்களை மக்கள் தெரிவித்தனர்.**

காலையிலேயே அணிதிரண்டு கொண்டிருந்த மக்கள் சாவகச்சேரி, மருத்துவமனையில் இருந்து நகரசபை வரை சாலையின் இருபுறங்களிலும் சமாதானத்தை வலியுறுத்தும் பதாதைகள் தாங்கியவாறு குழுமி இருந்தனர்.

காலை 10.30 மணியளவில், சாவகச்சேரி, பெற்றோல் நிரப்பும் நிலையத்தில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு பதினொரு மணியளவில் சாவகச்சேரி, பேருந்து நிலையத்தில் பொது அமைப் புக்களின் தலைவர் அருந்தவபாலன் தலைமையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுபபினர்கள் நடராசா ரவிராஜ், சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து பொது அமைப்புக்களின் தலைவர் அருந்தவபாலன் அவர்களால மகஜர் வாசித்துக் காட்டப்பட்டதுடன் 11.40 மணியளவில் தென்மராட்சி பிரதேச செயலர் சி.சினிவாசன் அவர்களிடம் அம்மகஜர் கையளிக்கப் பட்டது. இந்த வெகுசன எழுச்சிப் போராட்டத்தில் வங்கி ஊழியர்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்கள்,பனை தென்னை அபிவிருத்திச் சங்க ஊழியர்கள், வர்த்த கர்கள், மகளிர் அமைப்புக்கள் எனப் பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். தொடர்ந்தும் புதன்கிழமை கைதடியிலும், வெள்ளிக்கிழமை கொடிகாமத்திலும். இவ் எழுச்சிப் போராட்டங்கள் கூர்மையடையும் எனப் பொது அமைப்புக்களின் தலைவர் அருந்தவபாலன் தெரிவித்துள்ளார். (41,33,28)



## சமாதான வழியில் பயனில்லை எனின் தனி அரசைத் தவிர வேறுவழியில்லை

### -தேசிய கூட்டமைப்பு பா.உ.பத்மினி சிதம்பரநாதன்

(லண்டன்)

அரசு பேச்சுவார்த்தையைத் தொடங்க வேண்டும் என்ற அழுத்தத்தைக் கொடுப் பதற்காகவே நாங்கள் இந்த மனித சங்கிலிப் போராட்டத்தை நடத்துகின்றோம். இவ்வாறான சமாதான வழியால் பய னில்லை எனில் நாங்கள் ஒரு அரசை அமைப்பதைத் தவிர வேறுவழியில்லை. இவ்வாறு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் கூறியுள்ளார். சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்கவேண்டும் என்று சாவகச்சேரியில் நேற்று நடைபெற்ற மனித சங்கிலிப்போராட்டம் தொடர்பாக லண்டன் பி.பி.சியின் தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் தமது செவ்வியில் மேலும் கூறுகையில்; இந்த மனித சங்கிலிப்போராட்டத்தை தென்மராட்சி மக்களே நடத்தினார்கள்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

20.12.1988 அன்று யாழ். மாவட் டம் பொலிகண்டிப் பகுதியில் இந்திய இராணுவத் தினரால் சுடப்பட்டு நாட்டுப்பற்றாளர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். நாட்டுப்பற்றாளர் கிளி (சிவலிங்கம் -விஷ்ணுமூர்த்தி வதுவளை,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ மயமாகிவரும் எழுது மட்டுவாள் பகுதி

எழுதுமட்டுவாள் வடக்கு மருதங்குளம், கரம்பகம் போன்ற இடங்களிலுள்ள படை முகாம்கள், பலப்படுத்தப்படுவதுடன் பயிற்சி நடவடிக்கைகளும் தீவிரமடைந்து இருப்பதாகத் தெரிய வருகிறது. பலாலியில் இருந்து படையினர் இங்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உந்துருளி–ஈருருளி விபத்தில் வயோதிபர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் ஏற்பட்ட வீதி விபத்து ஒன்றில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளதுடன் துவிச்சக்கர வண்டி முற்றாகச் சேதமடைந்துள்ளது.

நேற்று மாலை 3.00 மணியளவில் நடை பெற்ற மேற்படி விபத்தில் கிளிநொச்சி திருநகர் வீதியிலிருந்து சென்ற துவிச்சக்கர வண்டியும் பிரதான வீதியால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு உதவ யாழ்.இல் செயற்குழு அமைப்பு

மழை வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு உதவி வழங்க யாழ்ப்பாணத்தில் செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கிழக்கில் வெள்ளத்தினால் பாதிக்கப் பட்டுப் போதுமான உதவிகளின்றித் துன்பப்படும் மக்களுக்கு உதவிகளை வழங்கவென யாழ்ப்பாணத்தில் பொது அமைப் புக்களைச் சார்ந்த பிரதிநிதிகளையும், பொதுமக்களை(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் கலந்துகொண்ட மாநாட்டிற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதியில்லை

மட்டக்களப்பில் இன்று வெள்ளப்பாதிப்புககளை பார்வையிட வந்த பிரதமரின் நிகழ்வுகளை செய்தியாக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் படையினரால் அனுமதிக்கப்பட வில்லை இந்தக் குற்றச்சாட்டை மட்டக்களப்பின் ஊடகவியலாளர்கள் சுமத்தியுள்ளனர் பிரதமர் மட்டக்களப்பின் 233 ஆவது

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள்-நோர்வேத் தூதுவர் நடத்திய தொலைபேசி உரையாடல் ஒட்டுக்கேட்பு

விடுதலைப் புலிகளுக்கும் நோர்வேத் தூதுவர் மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஆகியோருக்கு இடையில் பரிமாறப்பட்ட தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டுப் பதிவுசெய்யப்பட்டுள்ள தகவல் தற்போது அம்பலமாகியுள்ளது.

'இலங்கையில் சமாதானத்தையும் சன நாயகத்தையும் நோக்கி' என்ற தலைப்பில் கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கையின் சமாதானத் திற்கான உலக கூட்டமைப்பினால் மாநாடொன்று ஏற்பாடு செய்யப் பட்டு நடைபெற்றது. இந்த மாநாட்டில் விடு தலைப் புலிகளுக்கு எதிரான போக்குடைய உள்நாட்டு, வெளிநாட்டு அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசி யல் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு உதவுவது குறித்து நோர்வே விளக்க வேண்டும்

### -ஹெலஉறுமய பா.உ. வலியுறுத்து

நோர்வே ஏற்பாட்டாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நேரடியாக உதவியளிப்பது தொடர்பாக சிறிலங்கா நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கேட்டுள்ளது இது தொ்டர்பாக பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தனதேரர் சிறிலங்காவுக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**துவறிவிட்டது**

19.12.2004 அன்று வெலிக்கண்டல் சந்திக்கும், பரந்தன் சந்திக்கும் இடையில் பெருமாள்செல்வநாதன் என்பவரது தேசிய அடையாள அட்டையும் நிரந்தரப்பயண அட்டையும் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம்பணிமனையில் ஒப்படைக்கவும் தகவல் பெருமாள் செல்வநாதன். (5426)

**பெற்றுக்கொள்ளவும்**

தனித்தமிழ் டயறி, தினத்தாள் கலண்டர், மாதாந்த பஞ்சாங்கக் கலண்டர் மொத்தமாகவும், (விசேட கழிவு) சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உயர்ச்சி பொத்தகசாலை துணுக்காய்சாலை மல்லாவி. (4142)

# கிளி, முல்லை மாவட்டங்களுக்கான துரித காணி செயலணிக் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் காணிச் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களிற்கான துரித காணிச்செயலணியின் வேலைத் திட்டக் கருத்தரங்கு கிளிநொச்சி கச்சேரி நியாப் கேட்போர் கூடத்தில் நேற்று ஆரம்பமாகியது.

வடக்கு கிழக்கு மாகாண காணி ஆணையாளர் இ.இரவீந்திரன் தலைமையில் ஆரம்பமான மேற்படி கருத்தரங்கில் காணி ஆணையாளர், மாகாண காணி மேலதிகச் செயலர் பரமலிங்கம், கிளிநொச்சி அரச.அதிபர் தி.இராச நாயகம் ஆகியோர் கருத்துரை வழங்கினார்.

மேற்படி கருத்தரங்கில் கிளி, முல்லை மாவட்டங்களைச் சேர்ந்த பிரதேச செயலர்கள், பிரதேச செயலக காணி உத்தியோகஸ்தர்கள், வெளிக்களப் போதனாசிரியர்கள், எழுது வினைஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இன்றும் நடைபெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் வடகிழக்கு மாகாண காணி நிர்வாக திணைக்கள உதவிக் காணி ஆணையாளர் க.குருநாதன், திணைக்கள நில அளவையாளர் வை.சிவஞானசுந்தரம் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)


e-mAx

சகல விதமான இரண்டாம் தர கணனிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் e-mAx



வாடகைக்கு

- P II
- P III
- P IV
- Multimedia Projector
- Home Studio System
- Digital Camera
- Video Camera

சகல விதமான கணனிகளும் உதிரிப்பாகங்களும் விற்பனையாளர்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

e-mAx

குருமன்காட்டுச்சந்தி, குருமன்காடு, வவுனியா.

SM graphics

(சி-11116)


# விசேட இதயசிகிச்சை நிபுணரின் ஆலோசனைகளும் சிகிச்சையும்

நாளை புதன் கிழமையும் 23ஆம் திகதி வியாழக்கிழமையும் அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்திருக்கும் இதய சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மனமோகன் அவர்கள் கிளிநொச்சி டாக்டர் பொன்னம்பலம் ஞாகார்த்த மருத்துவமனையில் காலை 8.00 மணியிலிருந்து பிற்பகல் 2.00 மணிவரை வைத்திய ஆலோசனையும் சிகிச்சையும் வழங்கவுள்ளார். பயன் பெறவிரும்பும் நோயாளிகள் கிளிநொச்சி டாக்டர் பொன்னம்பலம் மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

# கேள்வி அறிவித்தல்

## கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை

01. தலைவர், கேள்விச்சபை, கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை. அவர்களால் இக்ராட் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டதும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தை உடையதும் இலங்கை தேசிய கட்டட ஒப்பந்தக்காரர் சங்கத்தின் அங்கத்தவர்களான (N.C.A.S.L.) ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பின்வரும் வேலைக்கான மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் 11.01.2005 ஆம் திகதி பி.ப.3.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

| இல | கேள்விக் குறியீட்டு இல/வலயம் | வேலை விபரம் | பதிவுத் தரம் |
|---|---|---|---|
| 01. | 08/05/NS/2004-02 யாழ்ப்பாணம் வலயம் | யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை 130X25 மூன்று மாடிக்கட்டட மிகுதி வேலை | எம்.7 |

02. கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிமனையில் 07.01.2005 ஆம் திகதி பி.ப.3.00 மணிவரை சாதாரண அலுவலக நேரங்களில் கீழ்க்காணும் ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

அ) கட்டடநிர்மாண வகுப்பில் எம்.07 தரத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் "இக்ராட்" நிறுவனத்தில் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகம் & இலங்கை தேசிய கட்டட ஒப்பந்தக்காரர் சங்கத்தின் அங்கத்தவர் அட்டை (N.C.A.S.L.)


ஆ) வலயக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தால் படிவம் பொது 172 இல் வழங்கப்பட்ட மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் ரூபா 750/- இற்கான பற்றுச்சீட்டு.

03. கேள்விதாரர் ஒருவர் கேள்விப்பத்திரம் ஒன்றை மட்டுமே பெறுவதற்குத் தகுதியுடையவர். கேள்விதாரர்கள் கேள்வி நிபந்தனைகளின் பந்தி 3.2.1.இல் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி உத்தரவாதப் பெறுமதியைக்கேள்வியுடன் இணைத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணம் வலயக்கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தில் பாடசாலை வேலைப் பகுதிகளில் இலவசமாகப் பார்வையிடலாம்.

ஆர்.தியாகலிங்கம்,
செயலாளர் தலைவர்,
அமைச்சு கேள்விச்சபை,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

(சி-11046)

# காணவில்லை



## ஆனந்தராசா மதிவதனன்

சொந்தமுகவரி:- கோப்பாய், யாழ்ப்பாணம்

தற்காலிகமுகவரி:-இரத்மலானை, கொழும்பு

பிறந்த திகதி- 1987 . 06 . 20

இவரை 13.12.2004 வவுனியாவில் இருந்து யாழ். செல்வதற்காக பயணிகள் பேருந்தில்சென்ற வேளையில் இருந்து காணவில்லை. இவரைக் கண்டவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி
M.சுந்தரமூர்த்தி,
இல.403, திருநகர்,
கிளிநொச்சி.

தொலைபேசி:-021-2285009
021-2285872
021-2283948

தகவல்:-
சகோதரி.

(5427)

# வீரவணக்கம்

## 04 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

தாயின் மடியில் 10 - 03 - 1973



தாயக மண்ணில் 21 - 12 - 2000

தமிழீழ காவல்துறை தலைமைக்காவலர்

## குணசீலன்

**(முனீஸ்வரன், குணசீலன்)**

**பூந்தோட்டம், வவுனியா**

எழுதுமட்டுவாள் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான பதுங்கித் தாக்குதலின்போது வீரச்சாவடைந்தார்.இம்மாவீரருக்கும் இந் நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

"தமிழீழ காவல்துறையினர்."

(5423)

# பாக்தாத்தில் இருவேறு குண்டுவெடிப்பு ௬௬பேர் பலி; 120 பேருக்கு மேல் படுகாயம்

(பாக்தாத்)

**ஈராக்கில் முஸ்லிம்களின் இரு புனித நகர்களான கர்பலாவிலும், நஜாப் நகரிலும் நேற்று முன்தினம் இடம்பெற்ற இருவேறு கார்க்குண்டுவெடிப்புக்களில் 66 பேர் கொல்லப்பட்டனர், 120பேர் காயமடைந்தனர்.**

கர்பலா, நஜாப் நகரங்களில் ஒருமணிநேர இடைவெளிக்குள் இருகார்க் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நடந்தன. முதலில் கர்பலா நகரில் கார்க்குண்டு வெடித்தது. கர்பலாவின் பிரதான பேருந்து நிலையத்தில் அந்தக்குண்டு வெடித்தது. பின்னர் நஜாப் நகரின் மையப் பகுதியில் நடந்த இறுதி ஊர்வலத்தின்போது வெடித்தது. ஏராளமானோர் அந்த இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். ஆதிவாசிப் பிரிவுத் தலைவர் ஒருவர் மரணமடைந்தார். அவரது இறுதி ஊர்வலத்தில் ஏராளமானோர் கலந்துகொண்டதுடன், நகரப் பொலிஸ் தலைவர் மாகாண ஆளுனர் ஆகியோரும் கலந்து கொண்டனர். அப்போது கார் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது.

ஈராக்கில் வரும் சனவரி 30ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது. சதாம் ஹுசைன் ஆட்சி கவிழ்ந்த பிறகு முதன்முறையாக அந்தத் தேர்தல் நடைபெறவுள்ளது.


தேர்தலைக்கெடுக்கும் நோக்குடன் இத்தகைய வன்செயல்கள் நடப்பதாகக் கருதப்படுகிறது. நஜாப் நகரில் நகரப் பொலிஸ் தலைவர் காலிப்அல்நசாரி மாகாணக் கவர்னர் அத்னான் அல்-ஜுருபி ஆகியோர் நின்றிருந்த இடத்திலிருந்து 100 மீற்றர் தொலைவில் அந்தக் கார்க்குண்டு வெடித்தது.

இந்தக் குண்டு வெடிப்பில் 47பேர் பலியானதாகவும், 69பேர் காயமடைந்ததாகவும் நஜாப் நகரின் அல்ஹக்கீம் மருத்துவமனை அதிகாரி யூசிப்முனிம் தெரிவித்தார். அருகில் உள்ள மற்றொரு மருத்துவமனையைச் சேர்ந்த அதிகாரியொருவர் மேலும் இருவர் கொல்லப்பட்டதாகவும், 21பேர் காயமடைந்ததாகவும் தெரிவித்தார்.

இந்த இரு குண்டு வெடிப்புகளிலும் பலியானோர் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.




ஈராக்கின் புனித நகரான நஜாப்பில் சக்தி வாய்ந்த கார்க்குண்டு வெடித்ததில் ஏற்பட்ட சேதத்தை அவதானிக்கும் ஈராக்கியர்கள்.



பாக்தாத்தில் அமெரிக்கக் கடற்படையினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில் நடைபெறும் சண்டையில் காயப்பட்ட ஒருவரை அப்புறப்படுத்த முயற்சிக்கும் சக வீரரையும் தாக்குதல் தொடர்வதையும் காட்டும் படம்.

# 2004ஆம் ஆண்டின் சிறந்த மனிதராக ஜோர்ஜ்புஷ் ரைம்ஸ் பத்திரியையால் தெரிவு



(வோஷிங்டன்)

ரைம்ஸ் பத்திரிகையின் 2004ஆம் ஆண்டிற்கான சிறந்த மனிதராக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்புஷ் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

தனது கொள்கையில் விடாப்பிடியாக இருந்தது. சந்தேகத்திற்கு இடமில்லாமல் சனாதிபதித் தேர்தலில் மீண்டும் வென்றது போன்றவற்றுக்காக அவர் 2004ஆம் ஆண்டின் சிறந்த மனிதராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர் ஜிம் கெல்லி தெரிவித்தார்.

# தனக்கு எதிரான நீதி மன்ற வழக்குகளைச் சந்திக்க சிறையில் இருந்து கொண்டு தயாராகிறார் ஹுசைன்

(லண்டன்)

தனக்கு எதிரான வழக்குகளைச் சந்திக்க தயாராகிறார் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஈராக் சனாதிபதியான சதாம் ஹுசைன்.

ஈராக் மீது அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணிப் படைகள் போர் தொடுத்ததை அடுத்து தலைமறைவான சதாம் ஹுசைன் பின்னர் பிடிபட்டார். அவர் தற்போது ரகசியமான இடத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக அமெரிக்க அரசு வழக்குத் தொடுத்துள்ளது.

இந்த வழக்கைச் சந்திக்க சதாம் ஹுசைன் தயாராகி வருகிறார் அமெரிக்காவில் வழக்கைச் சந்திக்குமாறு பிரிட்டனைச் சேர்ந்த மனித உரிமைகள் தொடர்பான வழக்குகளை நடத்தி வரும் ஸ்டாபோ.:.ர்டு ஸ்மித்,சதாமுக்கு ஆலோசனை கூறியுள்ளதாகத் தெரிகிறது.

அமெரிக்காவில் வழக்கைச் சந்திக்கும் பட்சத்தில் சதாமுக்கு தெரிந்திருக்க வேண்டிய சட்ட நடைமுறைகள் குறித்து அவர் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. இத்தகவலை 'சண்டே ரைம்ஸ்' வெளியிட்டுள்ளது.

ஈராக்கில் அதிபர் சதாம் ஆட்சியில் இடம்பெற்றிருந்த சிலர் மீதான வழக்கு விசாரணை அடுத்த வாரம் தொடங்கவுள்ளது. சதாம் மீதான வழக்கு விசாரணை அடுத்த ஆண்டு தொடக்கத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிகிறது.

ஈராக்கில் வழக்கு விசாரணை நடைபெற்றால் தமக்கு நீதி கிடைக்காது என்று சதாம் கருதுவதாகத் தெரிகிறது. மேலும் ஈராக்கில்



கொடுங்கோல் ஆட்சி நடத்தி வந்த சதாமுக்கு மரணதண்டனை வழங்க வேண்டும் என்று பலரும் கூறி வருகின்றனர்.

# பாக்.கடல் எல்லையில் நுழைந்ததாக 55 இந்திய மீனவர்கள் கைது

(கராச்சி)

பாகிஸ்தான் கடல் எல்லையில் மீன்பிடித்துக்கொண்டிருந்த 55இந்திய மீனவர்களை பாகிஸ்தான் அதிகாரிகள் சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.

அவர்களைச் சிறையில் அடைத்துள்ளதாகவும், அவர்கள் பயன்படுத்திய 10 படகுகளை பறிமுதல் செய்துள்ளதாகவும் பாகிஸ்தானிய அதிகாரிகள் கூறினர்.

இதனுடன் சேர்த்து பாகிஸ்தானில் சிறையில் இருக்கும் இந்திய மீனவர்களின் எண்ணிக்கை 286ஆக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு மனிதநேய அடிப்படையில் 200 மீனவர்களைப் பாகிஸ்தான் விடுவித்தது. இந்தியா 93 மீனவர்களை விடுவித்தது.

# சவுதி எண்ணெய்க் கிணறுகளை அழிக்க ஒசாமா முஜாகிதீன்களுக்கு அழைப்பு



சவுதி அரேபியாவில் உள்ள எண்ணெய்க்கிணறுகளைத் தாக்கியழிக்குமாறு முஜாகிதீன்களுக்கு ஒசாமா பின்லேடன் அழைப்பு விடுத்துள்ளார். ஒசாமாவின் அறிக்கையை இஸ்லாமிய இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

உலகிலேயே அதிகளவுக்கு கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடு சவுதியரேபியா அது தயாரிக்கும் கச்சா எண்ணெய் முஸ்லிம் நாடுகளுக்கு முழுமையாக பங்கீடு செய்யப்படுவதில்லை.

எனவே அதன் எண்ணெய்க் கிணறுகளைத் தாக்கி அழிக்குமாறு முஜாகிதீன்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## அவுஸ்.சில் நீண்டகால பிரதமராக ஜோன்ஹவாட்

அவுஸ் திரேலியாவில் நீண்டகாலம் பணியாற்றிய பிரதமர் என்ற பெருமையை ஜோன்ஹவாட் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

எட்டு வருடங்கள் அவர் தொடர்ந்து பிரதமர் பதவியை வகித்தமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத வெளிநாட்டவர் வெளியேற மலேசியா காலக்கெடு;மீறின் சிறை

மலேசியாவில் அனுமதியின்றி சட்டவிரோதமாக இலட்சக் கணக்கான வெளிநாட்டவர்கள் தங்கியுள்ளனர். அவர்கள் தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்ப மலேசிய அரசு டிசம்பர் 31 ஆம் திகதிவரை கெடு விதித்துள்ளது. இதுவரை 1 இலட்சத்து 42 ஆயிரம் பேர் தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பியுள்ளனர். இவர்களில் 1 இலட்சத்து 22 ஆயிரம் பேர் இந்தோனேசியாவைச் சேர்ந்தவர்கள். மீதி உள்ளவர்கள் சீனா, இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ், பங்களாதேசத்தைச் சேர்ந்தவர்கள். இன்னும் 2 இலட்சம் பேர் மலேசியாவில் தங்கியுள்ளனர். கெடு முடிவதற்குள் அவர்கள் சொந்த நாடு திரும்பினால் தண்டனை கிடையாது என அறிவித்துள்ளது. இந்தக் கெடு முடிந்த பிறகும் மலேசியாவில் சட்டவிரோதமாகத் தங்கி இருப்பவர்களுக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்படும்.

## தேர்தல் அதிகாரிகள் மூவர் ஈராக்கில் சுட்டுக்கொலை

(பாக்தாத்)


ஈராக்கில் சனவரி 30ஆம் திகதி நடக்க இருக்கும் தேர்தலைத் தடுக்கும் வகையில் 3தேர்தல் அதிகாரிகளைத் தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர். அதோடு 10 ஓட்டுனர்களைக் கடத்திச்சென்று கொல்லப்போவதாக மிரட்டியுள்ளனர்.

ஈராக்கில் தற்போது பிரதமர் அல்லாவி தலைமையில் இடைக்கால அரசு உள்ளது. அங்கு முறைப்படி தேர்ந்து எடுக்கப்பட்ட அரசு அமைக்க சனவரி 30ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடக்க இருக்கிறது. தேர்தல் ஏற்பாடுகள் தொடங்கிவிட்டன.

இந்த நிலையில் தேர்தலைச் சீர்குலைக்கும் நடவடிக்கையில் சதாம் ஹுசைனின் ஆதரவுத் தீவிரவாதிகள் ஈடுபட்டுள்ளனர்.



பிரிட்டன் பாராளுமன்றம் கொண்டுவந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எதிர்த்துத் தனது பதவிகளை சட்டத்தரணிகள் இராஜினாமாச் செய்ததையடுத்து பாராளுமன்ற வளவில் காவலிலீடுபட்ட பொலிசார் (சட்டம் பின்னர் சட்டவிரோதமானது என உயர் நீதிமன்றம் விளக்கியுள்ளது.)



சர்வதேசத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளில் முதல் தரமாகக் கருதக்கூடிய றைன் நதிக்கரையில் அமைக்கப் பட்டுள்ள 25ஆயிரம் பியர்போத்தல்களால் ஆன கிறிஸ்மஸ் மரம்.

# பொத்துவில் தமிழர், முஸ்லிம்களின் காணிகளை பௌத்த புனிதபிரதேசமாக்கி ஆக்கிரமிக்கத் திட்டம்

-அரசியல் வாதிகளின் பின்னணி நடவடிக்கை


(மட்டக்களப்பு)

**அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேசத்திலுள்ள தமிழ் முஸ்லிம்களுக்குரிய காணிகளை "முகுது விகாரை" என்ற புனித பிரதேசத்தின் பேரில் திட்டமிட்டு சுவீகரிப்பதற்கான சதி முயற்சியொன்றில் சில சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் அரசியல் வாதிகளின் பின்னணியில் தயாராகி வருகின்றார்கள்.**

ஏற்கனவே 'தீகவாவி' புனித பிரதேசம் என்ற போர்வையில் இம் மாவட்டத்திலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான வயல் நிலங்கள் சுவீகரிக்கப்பட்டு சில பகுதிகளில் திட்டமிட்டு சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது வெளிநாட்டு உல்லாச பயணிகளின் சொர்க்க புரியாக விளங்கும் உல்லை கடற் பிரதேசத்தை இலக்காக வைத்தே பொத்துவில் பிரதேசத்திலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகள் மீது சிங்கள பௌத்த பேரினவாதிகளின் கழுகுப் பார்வை வீழ்ந்துள்ளது. இது தொடர்பான சில தகவல்கள் வருமாறு; பொத்துவிலில் எந்தவொரு விகாரையும் இல்லாத வீதியொன்றிற்கு தற்போது 'முகுது விகாரை' வீதி என பெயரிடப்பட்டுள்ளது. இந்த வீதியில் ஒரு சிங்களவர் 'கூட வாழ்ந்ததுமில்லை. தற்போது கூட வசிப்பதுமில்லை. ஆனால் சில சிலைகள் கண்டெடுக்கப்பட்டதையடுத்தே இந்தப் பெயர் சூட்டப்பட்டு தற்போது விகாரையொன்று கட்டுவதற்கான முயற்சியும் நடைபெற்று வருகின்றது. பொத்துவிலில் ஒரேயொரு பௌத்த பிக்கு இருக்கின்றார். அவருக்கான உணவு போன்ற வசதிகளை அங்கே உள்ள முஸ்லிம்களே செய்து கொடுத்து வருகின்றனர். இதனைத் தவிர இப் பகுதியில் முஸ்லிம் ஒருவருக்கு சொந்தமான காணியில் பௌத்த யாத்திரிகர் மடமொன்றும் தற்போது கட்டப்பட்டு வருகின்றது. அந்தக் காணியில் தற்போது புதைபொருள் ஆராய்ச்சிகள் நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அறுகம்பை பாலத்திற்கு அருகாமையிலுள்ள விசேட அதிரடிப் படை முகாமை அண்மித்த பிரதேசத்தில் படைவீரர்களைத் தவிர ஒரு சிங்களவர் கூட அங்கு இல்லை. அப்படியிருக்க புடையினரின் வழிபாட்டிற்காக முகாமிற்கு அருகில் சிறியதொரு புத்தர் சிலை வைக்கப்பட்டிருந்தது. தற்போது தாய்லாந்திலிருந்து கொண்டு வரப்பட்ட 70 லட்சம் ரூபா பெறுமதியான புத்தர் சிலையொன்று அங்கு வைக்கப்பட்டுள்ளது. பொத்துவில்- மொனராகலை வீதியில் மூன்றாம் கட்டையில் முஸ்லிம்களுக்கு சொந்தமான 7 ஏக்கர் காணியில் சுற்றுவேலி அமைக்கப்பட்டு புதைபொருள் ஆராய்ச்சி திணைக்களத்தினால் உரிமை கோரப்பட்டுள்ளது. அந்த இடத்தில் தற்போது பொலிஸ் காவலரணொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர நாவலாறு, சாஸ்திரவெளி போன்ற இடங்களிலுள்ள தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்குரிய காணிகளிலும் சிங்கள குடியேற்றங்களை செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. பொத்துவில் பிரதேச செயலகத்தின் எல்லைப் பகுதியை சிங்களவர்களை பெரும்பான்மை யாகக கொண்ட லகுகல பிரதேச செயலகப் பிரிவு தனது எல்லைக்குள் சுவீகரித்துள்ளது. மேலும் உல்லைப் பிரதேசத்தில் சிங்களவரொருவர் அரசாங்கத்திற்கு சொந்தமான காணியில் உல்லாச ஹோட்டலொன்றை நிர்மாணித்து வருகின்றார். இந்தக் காணிக்கான உரிமைப்பத்திரங்கள் ஏற்கனவே தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய பௌத்த பேரினவாத செயற்பாடுகளுக்கெல்லாம் பிரதான சூத்திரதாரி ஐக்கிய தேசியக் கட்சியின தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் பி.தயாரத்ன, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.கலப்பதி என மக்கள் பேசிக்கொள்கின்றார்கள்.

## கொடுப்பனவுவழங்குக!

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்கள் தமக்கு 2004ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என கவலை தெரிவித்துள்ளனர். பதிவாளர்களின் அலுவலக வாடகைப்பணம், காகிதாதிகள் என்பனவற்றுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளையும், மாதாந்தக் கொடுப்பனவுகளையும் வழங்க சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளை உடன் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (14)



பரந்தன் சந்திக்கருகாமையாக ஏ-9 வீதியில் நேற்றுப் பகல் முன்னால் பயணித்தபேருந்துடன் பின்னால் பயணித்த பேருந்து மோதியதில் பின்னால் பயணித்த பேருந்தில் பயணித்த வயோதிபப் பெண் ஒருவர் காயங்களுக்குள்ளானார். இச்சம்பவத்தில் பின்னால் பயணித்த பேருந்தின் முன்பகுதி பெரும் சேதத்திற்குள்ளாகியதனை படத்தில் காணலாம். (படம்-சோதி)

## சுத்திகரிப்புத் தொழிலாளரை நியமிக்க எழுத்துப் பரீட்சை!

பி.மா.சு.சே. திடீர்முடிவு

(முல்லை)

முல்லை.மாவட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான நேர்முகத்தேர்வு 17.012.2004 நடைபெறவில்லை. இத் தொண்டர்களுக்கான எழுத்து மூலமான பரீட்சையே நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாக திருகோணமலை பிரதி மாகாண சுகாதாரசேவைப்பணிமனையின் நிர்வாக அலுவலர் இரவீந்தர் முல்லை.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்தார்.

சுத்திகரிப்பாளர்களாக 62 பேர் நேர்முகத்தேர்வுக்காக அழைக்கப்பட்டிருந்தது. ஆனால் சுத்திகரிப்பாளர்களைத் தெரிவு செய்வதற்கு எதற்காகப்பரீட்சை என தொண்டர்கள் கவலை தெரிவித்தனர். (20)

## 2005-இல் விவசாய, கால்நடை அபிவிருத்தி திட்டங்களை வகுக்க கலந்துரையாடல்

முக்கிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டன

(ஒட்டுசுட்டான்)

2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய விவசாய கால்நடை அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் நடைபெற்றது.

கடந்த 13 ஆம்திகதி காலை 10.30 மணியளவில் வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் தலைமையில் நடைபெற்றது. இதில் கிளி, முல்லை, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாய உதவிப்பணிப்பாளர்கள், வடபகுதி விவசாய ஆராய்ச்சி அலுவலா், யாழ்.மாவட்ட கால் நடை உதவிப்பணிப்பாளர், வடபகுதி கால நடை வைத்தியர்கள் ஆகியோா கலந்து கொண்டனர்.

இதில் அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்படும் நிதியுதவிகளை மக்களின் தேவைகளுக்கு ஏற்ப சிறந்த முறையில் பயன்படுத்துவதற்காக அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிஆராயப்பட்டது.

த.பொ.மே. நிறுவன பொறுப்பாளர் கரிகாலன் கருத்துக் கூறுகையில்; இதுவரை வன்னிப்பிரதேச மக்களுக்கு வழங்கப்பட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் ஒருங்கிணைக்கப்படாமல் செயற்பட்டமையால் பயனாளிகள் உரியமுறையில் நன்மையடையவில்லை. எனவே புதிய ஆண்டில் மேற்கொள்ளப்படும் அனைத்து விவசாய விலங்குவேளாண்மை, நன்னீர்மீன்படி வளர்ப்புத் திட்டங்கள் அனைததும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இக்கலந்துரையாடலின் அத்தியாவசிய தேவையாக கருதப்பட்ட கால் நடை தீவனத் தொழிற்சாலை, கால்நடை நல்லின விருத்தி, சோளன் உற்பத்தி செய்கை, மீன் தூள் உற்பத்தி தொழிற்சாலை, கனிமப் பொருள் உற்பத்தி, கோழிக் குஞ்சு உற்பத்தி, ஆட்டினவிருத்தி, காலபோக மரக்கறி உற்பத்தி செய்கை போன்றவை இனங்காணப்பட்டு முன்னுரிமைப்படுத்தப்பட்டது. (05)

## முல்லை கூட்டுறவாளருக்கு மேம்படுத்தல் பயிற்சிநெறி

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குனர்கள் பொது முகாமையாளர்கள் ஆகியோருக்கான விற்பனை அபிவிருத்தி மற்றும் வினைத்திறனுடன் செயற்பாடுகளை ஆற்றுதல் ஆகியன தொடர்பான இருநாள் பயிற்சி நெறி கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஒன்று கூடல் மண்டபத்தில் முல்லை.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் சீ.மோ.சிவமயம் தலைமையில் கடந்த 11ஆம் திகதி ஆரம்பமானது.மேற்படி பயிற்சி நெறியில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் கோணேஸ்வரன், கூட்டுறவு விரிவுரையாளர் தி.கனகசபாபதி, மாகாண கூட்டுறவு விரிவுரையாளர் ஞா.கேதீஸ்வரன் ஆகியோர் கூட்டுறவும், செயற் பாடும், முகாமைத்துவமும், ஆளுமையும், கூட்டுறவுவளர்ச்சி வினைத்திறன் செயற்பாடு ஆற்றல் தொடர்பான விளக்க நெறியினை வழங் கினா். அன்றைய தினம் 4.30 மணிக்கு நிறைவாகி மறுநாள் காலை மீண்டும் பயிற்சிநெறிஆரம்பமாகி நிறைவடைந்தது.(ஆ)

## பாலம் சேதமடைந்துள்ளதால் போக்குவரத்துத் தடை!

(முல்லை)

புதுக்குடியிருப்பு கேப்பாபிலவு வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட பாலம் மழைவெள்ளம் காரணமாக ஒரு பகுதி உடைந்துள்ளது.

இதனால் இப்பாலத்தினூடாக முற்று முழுதாகப் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் முல்லைத்தீவு நகரினூடாக முள்ளியவளைக்கு வாகனங்கள் செல்கின்றன. முத்துஐயன்கட்டு குளத்திலிருந்து மேலதிக நீர் பாய்ந்ததினால் தான் இப்பாலம் சேத முற்றுள்ளது என சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

வீதி அபிவிருத்தித்திணைக்களமே இப்பாலத்தின் மேற் பார்வையினை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## கமநல அபிவிருத்தி சேவை திணைக்களத்தை விரைந்து புனரமைக்க வலியுறுத்து

(முள்ளியவளை)

முள்ளியவளை கமநல அபிவிருத்தி சேவைத் திணைக்கள கட்டடங்கள், கூரைகள் அழிந்து போகும் அவல நிலையில் உள்ளதை அவதானிக்க முடிகின்றது. மேற்படி திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி சு.இராசலட்சுமியை எமது செய்தியாளர் சந்தித்து மேற்படி விடயம் தொடர்பாக கேட்டபோது அவர் தெரிவிக்கையில்:-

எமது திணைக்களம் நிர்மாணிக்கப்பட்டு பல ஆண்டுகள் தாண்டிய நிலையில் உள்ளது. கடந்த கால போர் அனர்த்தங்களின் போது ஏற்பட்ட அதிர்வுகளினாலும் மேலும் சீரழிந்து போனது, திணைக்கள சுவர்கள் பாரிய வெடிப்புகளுடன் நிலங்கள் உடைவுற்று குன்றும் குழியுமாகவும், கூரை ஓடுகள் உடைந்தும், விலகியும் உள்ளதால் மழை ஒழுக்கு திணைக்கள செயற்பாடுகளை பாதிப்புக்குள்ளாக்குவதுடன் திணைக்கள களஞ்சியக் கட்டடம் கூரை என்பன பாழடைந்து போகும் நிலையில் உள்ளதால் களஞ்சியக் கட்டடத்தில் விவசாய உள்ளீடுகள் களஞ்சியப்படுத்தி விவசாயிகளுக்கு வழங்குவதிலும் பெரும் சிரமம் ஏற்பட்டு வருகின்றது.

எமது திணைக்களத்தின் அபிவிருத்தி புனரமைப்பு திருத்த வேலைகள் செய்யப்பட வேண்டும் எனவும் நுழைவாசல் கதவுகள் இணைக்கப்பட்டுள்ள மதில் இடிந்தும் உள்ளது. அதனையும் மீளக் கட்டப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு தெரியப்படுத்தியுள்ளேன். ஆனால் இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி திணைக்கள கட்டடங்கள், கூரைகள், கட்டட நிலம் என்பன உடனடி திருத்த வேலைகள் செய்யப்படாவிடின் பாழடைந்து அழிவுக்குள்ளாகும் நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## இடமாற்றம்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட விவசாய உதவி ஆணையாளர் தர்மலிங்கம் இவ்வாண்டுடன் மாற்றமாகிச் செல்ல முல்லைத்தீவு மாவட்ட விவசாய உதவி ஆணையாளராக என்.சிவலிங்கன் எதிர் வரும் சனவரி மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளதாக அறியவருகிறது. (ஆ)

# வடமராட்சியில் 60 வீத முன்பள்ளிச் சிறார்கள் போஷாக்கின்மையால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் வாழும் முன்பள்ளிச் சிறார்களில் 60 வீதமானோர் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாக வடமராட்சி வலய கல்விப் பணிமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த கால யுத்தம் அதன் விளைவாக ஏற்பட்ட சொத்தழிவு மற்றும் தொழில் வாய்ப்பு இன்மைகள் காரணமாக மேற்படி பிரதேச வாழ் மக்களில் அதிகளவானோர் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாகவே இப்பகுதி சிறார்களுக்கு போஷாக்கு இன்மை காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப் படும் அதேவேளை வறுமையால் பாதிக்கப்பட்டு போஷாக்கு நிலைமையில் பின்தங்கிப்போயுள்ள சிறார்களுக்கான சத்துணவுத் திட்டங்களை நடைமுறைப் படுத்த உரிய தரப்பினர் முன்வரவேண்டும் எனப் பலரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். (33)

# குருநகர்-திருநகர்ப் பகுதிகளில் அமைதியை ஏற்படுத்த குழு!

(யாழ்ப்பாணம்)

யாழ். குருநகர்- திருநகர் பகுதிகளைச் சேர்ந்த குழுக்கள் இடையில் தொடர்ந்தும் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டு வரும் முகமாக 30 பேர் கொண்ட சமாதானக் குழு ஒன்று நேற்று முன்தினம் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளைச் சேர்ந்த இரு பிரிவினருக்குமிடையேயான இம் முரண்பாடுகளுக்கு தீர்வு காணும் விதமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன், கடற்புலிகளின யாழ். மாவட்டப் பொறுப்பாளர் அருண் மற்றும் வணபிதா ஜெஜெயக்குமார், வணபிதா ஜிமைக்கல் சவுந்தரநாயகம், வணபிதா சகாயநாயகம் ஆகியோரது மத்தியஸ்த்துடன் குருநகர், திருநகர் பகுதிகளைச் சேர்ந்த பெரியார்கள், குழுப்பிரதிநிதிகள் ஆகியோருக்கிடையே யாழ் ஆயர் இல்லத்தின் மறைக்கல்வி நிலையத்தில் நடை பெற்ற சமரசப் பேச்சுக்களின் முடிவிலேயே இக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குருநகர்-திருநகர் பகுதியில் கடந்த மாதம் 29ஆம் திகதி தொடக்கம் நிலவி வந்த பதற்றம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. (33)

– மீள்குடியமர்வு கொடுப்பனவை துரிதப்படுத்தக் கோரும் –

# பொதுமக்களை அச்சுறுத்தும் அரச அதிபரின் அறிவிப்பு மனிதநேயமற்ற செயலாகும்!

**- யாழ்.பொது அமைப்புக்களின் ஒன்றியம் கண்டனம்**

**(யாழ்ப்பாணம்)**

**மீள்குடியமர்வு கொடுப்பனவுகளை துரிதப்படுத்தக் கோரி போராட்டங்களில் ஈடுபடும் பொதுமக்களை அச்சுறுத்தும் விதமாக யாழ். அரச அதிப ரால் விடுக்கப்பட்ட இவ்அறிவித்தல் மனிதநேயமற்ற ஓர் செயற்பாடு என யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.**

மீள் குடியமர்வு கொடுப்பனவு வழங்கலைத் துரிதப்படுத்தக் கோரி போராட்டங்களில் ஈடுபடுவோரது பெயர்கள் மீள்குடியமர்வு கொடுப்பனவு வழங்கலுக்கான முன்னுரிமைப்படுத்தப்பட்ட பட்டியலில் இருந்து நீக்கப்படும் என யாழ்மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் அறிவித்திருந்தமை தெரிந்ததே.

அரசு புலிகளுக்கிடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் யாழ்.குடாநாட்டில் மீளக்குடியமரத் திரும்பியுள்ள மக்களுக்கு மீள்குடியமர்வு கொடுப்பனவாகிய 25.000 ரூபா நிதி வழங்கப்பட்டாலும் பலருக்கு இன்னமும் இது வழங்கப்படவில்லை. இதனை ஆட்சேபித்து பொது மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் போராட்டங்களில் மக்களை ஈடுபடாது தடுக்கும் முகமாக யாழ்அரச அதிபர் இவ்வறிவித்தலை விடுத்திருப்பதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இனவாத செயற்பாடுகளாலும், அரச கெடுபிடிகளாலும், பாதிக்கப்பட்ட மக்களை புனர்வாழ்வு உதவிகளைக் கோரி போராட விடாது எச்சரிக்கை விடுத்துள்ளமை மக்களை மேலும் பாதித்துள்ளது என் பதை சுட்டிக்காட்டி இக்கண்டனத்தைத் தெரிவித்துள்ள பொது அமைபபுக்கள் ஒன்றியம் சிங்கள பேரினவாத செயற்பாடுகளுக்கு தூபமிட்டு மக்களை ஒடுக்க முனைந்தால் அதன் விளைவாக பாரிய போராட்டங்கள் வெடிக்கும் எனவும் எச்சரித்து அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. (33)

# தமிழ் மாணவர் ஒன்றியம் வறிய மாணவர்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். கொழும்புத்துறை மற்றும் அரியாலைப் பகுதிகளில் வாழும் வறிய மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக தமிழ் மாணவர் ஒன்றியத்தால் அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மற்றும் இடம்பெயர்வுகளால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் குடும்பங்களைச் சேர்ந்த சிறார்கள் பலர் தமது கல்வியைத் தொடர்வதில் பலவித சிக்கல்களையும் எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறான மாணவர்களது நலன்களை கவனத்தில் கொண்டே இவ் உதவி வழங்கப்பட்டுள்ளது.(33)

# கடற்றொழில் உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். சங்கானைப் பிரதேச மீனவர்களின் தொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்காக' மூவிமென்டோ தொண்டர் நிறுவனத்தினால் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

போரினால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் மேற்படி பிரதேச மீனவர்களது பொருளாதார மேம்பாட்டினைக்கவனத்தில் கொண்டே இவ்உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் மேற்படி பிரதேச மீனவர்களுக்கு கட்டு மரங்கள், வலைகள், வெளி இணைப்பு இயந்திரங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன. (33)

# இடைக்காலநிர்வாக வரைவை ஏற்க சனாதிபதி சந்திரிகா தயாராக இல்லை!

**- பேராசிரியர் ரஞ்சித் அமரசிங்க கருத்து**

(வடமராட்சி)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடுத்துவரும் ஆண்டுகளில் தனது ஆட்சியினை எப்படி தொடர்ந்து தக்கவைப்பது என்ற சிந்தனையிலேயே இருக்கின்றார். அதற்கேதுவாக அரசியல் யாப்பினையும் மாற்றியமைக்க அவர் தயாராக இருக்கின்றார். ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக வரைவை ஏற்று அங்கீகரிக்க ஏதுவாக அரசியல்யாப்பினை மாற்றி அமைத்துக்கொள்ள மட்டும் அவர்தயாராக இல்லாதிருப்பதாக குற்றம் சாட்டியுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ரஞ்சித் அமரசிங்க.

விழுது மனிதவள அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் சமாதான நடவடிக்கையின் எதிர்காலம் தொடர்பான பகிரங்க கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தினில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இக்கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் மேலும் உரையாற்றுகையில் விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால வரைவு சமஷ்டி முறையை சேர்ந்ததா? கூட்டாட்சி முறையினை சேர்ந்ததா? என எந்தவொரு பெட்டியினுள்ளும் அடையாளப்படுத்தி போடமுடியாததாகவுள்ளது. இதனால் தான் அது ஒரு தனித்துவமானதாக இருக்கின்றது அதனாலேயே தென்னிலங்கையில் எதிர்ப்பும் தோன்றியுள்ளது.

இடைக்கால வரைவு இலங்கையின் இறைமைக்கு உட்பட்டதா, இல்லையா மற்றும் அது கொண்டுள்ள அதிகாரங்கள் என்பவை தொடர்பில் தென்னிலங்கையில் பலத்த சந்தேகங்கள் உள்ளன. ஆனாலும் தென்னிலங்கையினை சேர்ந்த ஒரு சாரார் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக வரைவை ஏற்று அதனை வழங்குவதே சமாதானத்துக்கு வழியென கூறிவருகின்றனர் எனினும் சில தரப்புகள் இடைக்கால நிர்வாகம் தொடர்பில் சந்தேகங்களைக் கொண்டுள்ளனர். இவ்வாறான சந்தேகங்கள் களையப்பட வேண்டும்

எல்லாவற்றிக்கும் மேலாக இடைக்கால நிர்வாக வரைவை ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் சனாதிபதி யாப்பை மாற்றியமைக்க முடியும் எனவும் அவர் கருத்து வெளியிட்டார்.

இதேவேளை இக்கூட்டத்தினில் அரச அமைப்பு விவகாரக்குழுவின் அங்கத்தவரும் சமாதான செயலகத்தின் சட்டப்பிரிவின் பணிப்பாளருமான லக்ஷ்மன் மாரசிங்க கருத்துரைகளை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து, 'ஒதுக்காதி ஒதுக்கன்,' எனும் வீதி நாடகமும் அரங்கேற்றப்பட்டது. (27)

# வெடிபொருட்கள் குறித்த பாடத்திட்டம் குடாநாட்டு பாடசாலைகளில் அறிமுகம்

யாழ் மாவட்டத்தில் மிதிவெடி அபாயக் கல்வியை பாடசாலை மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் ஒன்றாகப் புகட்டுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மிதிவெடிகள் அல்லது வெடி பொருட்களின் விபத்துச் சம்பவங்களுக்கு இலக்காகி பாதிக்கப்படுவோரில் பாடசாலை மாணவர்களே கணிசமான அளவில் காணப்படுகிறார்கள்.

இதனால் படையினரால் கைவிடப்பட்ட வெடி பொருட்கள் மற்றும் பொறிவெடிகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக மிதிவெடி அபாயக் கல்வியை மேலதிகமான ஒரு பாடமாக பாடத்திட்டத்துடன் இணைத்து புகட்டப்படவுள்ளது. இது தற்போது யாழ். மாவட்டத்தில் இயங்கி வரும் சகல பாடசாலைகளிலும் அறிமுகப்படுத்தப்படும். (33)

# தீவக பாடசாலைகளுக்கு அறிவியல் நூல்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகப் பகுதியில் உள்ள 25 பாடசாலைகளில் உள்ள பாடசாலை நூலகங்களுக்கான அறிவியல்சார் நூல்களை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளது. மாணவர்களின் அறிவியல் வளர்ச்சியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே ஆசிய அபிவிருத்தி வங்கி இவ் உதவிகளை வழங்க முன் வந்திருக்கிறது.இதனடிப்படையில் மேற்படி பகுதியில் உள்ள 25 பாடசாலைகளுக்கு தலா 100 நூல்கள் வீதம் வழங்கப்பட்டுள்ளன.(33)

# சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு பிரதேச ரீதியாக விழிப்புணர்வு நடவடிக்கை

**- தமிழீழ சுகாதார சேவைகள் முன்னெடுப்பு**

(உடையார்கட்டு)

சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு முல்லை மாவட்ட தமிழீழ சுகாதார சேவைகள் தொற்று நோய் தடுப்பு பிரிவினரால் எயிட்ஸ் விழிப்புணர்வு செயற்பாடு பிரதேச ரீதியாக நிகழ்த்தப்பட்டு வருகிறது.

இவ்விழிப்புணர்வுச் செயற்பாடுகளை வாணிப நிலைய உரிமையாளர்கள், பணியாளர்கள் கூட்டுறவுப் பணியாளர்கள், சிகை அலங்கரிப்பு நிலையப் பணியாளர்கள், உரிமையாளர்கள் மற்றும் மக்கள் ஆகியோருக்கு வழங்கி வருகின்றனர்.

இதில் எயிட்ஸ் தொடர்பான கருத்தூட்டல், வருமுன் காத்தல் போன்ற விடயங்கள் விரிவாக வழங்கப்படுகிறது. மேலும்ஒலிபெருக்கி மூலமாகவும் விழிப்புணர்வு கருத்துக்கள் முன்னெடுக்கப்படுகிறது. (19)

# பாடசாலை குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டுகை

கொடிகாமம், வரணி மகாவித்தியாலயத்திற்கு பாரிய பிரச்சினையாக உள்ள இடப்பற்றாக்குறை, கட்டடவசதி இன்மை மற்றும் தளபாடப் பற்றாக்குறை போன்றவற்றை உடனடியாக நிவர்த்தி செய்து மாணவர்களின் ஆரோக்கியமான கல்விச்செயற்பாட்டை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாடசாலை அபிவிருத்திச்சபை அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

850 மாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலையில் பின்தங்கிய பகுதிகளான மசேரி, கரம்பக்குறிஞ்சி, தாவாளை, இயற்றாலை, வரணி, இயற்றாலை, நாவற்காடு, குடமியன், மந்துவில் போன்ற பகுதிகளில் இருந்து கல்வி பயிலும் மாணவர்களின் நலன் கருதி உடனடியாக இவ்வேலைத்திட்டங்களை அரசு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் செய்து தரவேண்டுமென மக்கள் கோரியுள்ளனர். (28)

# வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கனேடியத் தமிழ் மக்களின் நேசக்கரங்கள்

**கனடாவிலிருந்து எழிலன்**



கடந்த சில நாட்களாக ஈழத்தில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கனேடியத் தமிழ் மக்களின் நேசக்கரங்கள், நிதியுதவியாக கனேடியத் தமிழ் வானொலி மூலம் ஒன்றிணைக்கப்பட்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திற்கு நிதியுதவியாக அனுப்பப்பட்டுள்ளது. கனேடியத் தமிழ் வானொலியான (CTR) சி.ரி.ஆரின் முதல் கட்ட சேகரிப்பு நிதியான 60 லட்சம் இலங்கை ரூபாவை சனிக்கிழமை கொழும்பில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் சந்துரு பரராசசிங்கம் பெற்றுக்கொண்டார்.

தமிழீழத்தின் வெள்ள அனர்த்தங்களுக்கு ஸ்ரீலங்கா அரசு பாராமுகமாக இருப்பதை புலம்பெயர் நாடுகளுக்கு எடுத்துரைத்த புனர்வாழ்வுக்கழகத்தின் பொறுப்பாளர் ரெஜி அவர்கள் இது விடயத்தில் புலம் பெயர் தமிழர்களின் உதவியை கோரியிருந்தார். இந்தச் செய்தி கனேடியத் தமிழ் வானொலியில் அறிவிக்கப்பட்டதும் கனேடிய தமிழ் வானொலிக் கலைஞர்கள் உடனடியாக தமது முதல் நிதியைச் செலுத்தி நிதிச் சேகரிப்பை வானொலி மூலம் ஆரம்பித்தனர். அன்றைய தினம் வேலை நாளாக இருந்த போதும் உடனடியாக வீடுகளில் இருந்த முதியவர்கள் மற்றும் நேயர்கள் தமது பங்களிப்பைச் செய்தனர். இதனைத் தொடர்ந்து வேலைத்தளங்களில் இருந்த தமது உறவுகளுக்கும் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து நிதி வெள்ளமெனக் குவிந்தது. மூன்று நாட்களில் வானொலியால் உடனடியாகச் சேர்க்கப்பட்ட 72,225 கனேடிய டொலர்கள் பணத்தை அவசர உதவியாக வெள்ளிக் கிழமை இரவு அனுப்பி வைத்தனர்.



அன்று கனேடியத் தமிழ் வானொலியின் நிதியைப் பொறுப்பேற்கும் நிகழ்வில் தாயகத்திலிருந்து தொலைத்தொடர்பு மூலம் கலந்துகொண்டு பேசிய புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் ரெஜி அவர்கள் - தமிழீழ மக்களுக்கு இந்த நிதியுதவியால் செய்யப்படவுள்ள நிவாரணப் பணிகளை எடுத்துரைத்ததுடன், அம்மக்கள் சார்பில் நன்றியையும் தெரிவித்தார். அப்போது வானொலி நிலையத்தில் இருந்த (Cash-Point) துரித பணமாற்றுச் சேவை நிறுவத்தினர் தாம் இப்பணத்தை உடனடியாகப் பெற்று மறுநாள் சனிக்கிழமை கொழும்பில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் சந்துரு பரராசசிங்கம் அவர்களிடம் ஒப்படைப்பதாக ரெஜி அவர்களுக்கு உறுதியளித்தனர்.

அதன்படி இவ்வாறு கிடைத்த நிதியில், அவசரத் தேவையான நுளம்புவலைகள், போர்வைகள், பாய்கள், மருந்துகள் என்பன பெற்றுக்கொடுக்கப்படும் என்று ரெஜி அவர்கள் கனேடிய தமிழ் மக்களுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றும்போது வானொலியில் தெரிவித்தார். கனேடியத் தமிழ் வானொலியின் சேவையையும், அதன்பால் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் ரெஜி அவர்கள் குறிப்பிட்டு கடந்த காலங்களிலும் கனேடியத் தமிழ் மக்கள் காட்டிய அளப்பரிய அன்பையும், உதவியையும் நினைவு கூர்ந்தார்.

அப்போது தமிழீழ மக்களின் துன்ப துயரங்களில் தாம் என்றும் உடன் கரம் கொடுப்போம் என்று கனேடிய வாழ் புலம் பெயர் தமிழ் மக்கள் ரெஜி அவர்களிடம் வானொலியூடாக பேசுகையில் உறுதியளித்தனர். முதல் கட்டமாக மூன்று நாட்களில் கனேடியத் தமிழ் வானொலியின் கலைஞர்கள், நேயர்கள், வர்த்தகர்களின் உதவியால் சேகரிக்கப்பட்ட 60 லட்சம் ரூபாவையும் அனுப்பிவைப்பதாகக் கூறிய கனேடியத் தமிழ் வானொலி நிலையப் பொறுப்பாளர் கலாதரன் - தொடர்ந்து சேகரிக்கப்படும் பணத்தையும் தேவை கருதி விரைவில் அனுப்பி வைக்க ஒழுங்குகள் செய்வதாகத் தெரிவித்தார்.

24 மணிநேரத் தமிழ் வானொலியான கனேடியத் தமிழ் வானொலி (CTR) தினமும் தமிழீழ மக்களின் அன்றாட நிலைமைகள் மற்றும் தேவைகள் குறித்தும், புனர்வாழ்வுக் கழகத்தின் சேவை குறித்தும் இங்குள்ள செய்தியாளர்கள் மற்றும் அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மூலம் நீண்ட நேர கலந்துரையாடல்கள் மற்றும் செவ்விகளை நடத்திவருகின்றனர். இந்த வகையில் தமிழீழத்தில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்ட நாட்களில் தினமும் தமிழீழத்தின் பல பகுதிகளிலிருந்தும் செய்திகளை சேகரித்ததுடன், தமது செய்தியாளர்கள் குறிப்பாக மதி (வன்னி), நிலவன் (மட்டு), காந்தன் (மட்டு) மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள், அரச அதிபர்கள், அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், புனர்வாழ்வுக் கழக மட்டு. பொறுப்பாளர் சீசர், திருமலைப் பொறுப்பாளர் கிருபா, கொழும்பு இணைப்பாளர் சந்துரு பரராஜசிங்கம் போன்றோரின் செவ்விகள் மூலம் கனேடியத் தமிழ் மக்களுக்கு தமிழீழ மக்களின் நிலைப்பாட்டை எடுத்துரைத்து வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் கனடாவில் ரொரன்ரோ மாநகரில் இடம்பெற்ற பொங்கு தமிழ் நிகழ்ச்சியில் ஒரு லட்சத்திற்கும் அதிகமாக மக்களைத் திணரச் செய்ததில் இந்த வானொலியே பெரும்பங்காற்றியிருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அதே சமயம் செய்தியாளர் நடேசன் இனவிரோதிகளால் கொல்லப்பட்ட செய்தி அறிந்து இவ்வானொலியின் நேயர்கள், உடனடியாக கனேடியத் தமிழ் வானொலியூடாக அவரின் குடும்பத்தினருக்கு ஐந்து லட்சம் ரூபாவை வழங்கியிருந்தனர் என்பதும் நினைவு கூரத்தக்கது.

## முல்லையில் 5176 குடும்பங்கள் வெள்ளத்தால் கடும் பாதிப்பு!

(முல்லை)

முல்லை மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களில் வெள்ள நிவாரணம் பெறத் தகுதியானவர்கள் 5176 குடும்பங்கள் என முல்லை மாவட்ட அரச அதிபர் செயலக உதவி அரச அதிபர் தலைமைப்பீட அதிகாரி செல்வி ப.ஆரணி தெரிவித்தார்.தகவல் அடிப்படையில் கரைதுறைப்பற்றில் 902 குடும்பங்களும், புதுக்குடியிருப்பில் 959 குடும்பங்களும் ஒட்டுசுட்டானில் 1235 குடும்பங்களும், துணுக்காயில் 976 குடும்பங்களும், மாந்தை கிழக்கில் 1104 குடும்பங்களுமே பாதிக்கப்பட்டு வெள்ள நிவாரணம் பெறத் தகுதியானவர்கள் எனவும் தெரிவித்தார். (20)

## பிரிவுபசாரம்

(மல்லாவி)

மல்லாவி அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றி இடமாற்றலாகச் செல்லும் உத்தியோகத்தர்களுக்கான பிரிவுபசார நிகழ்வு நேற்று முன்தினம் 11.00 மணிக்கு அரசினர் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியும், அபிவிருத்திக் குழுத்தலைவியுமான ஏகாம்பரமூர்த்தி தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் மாற்றலாகிச் செல்லும் உத்தியோகத்தர்கள் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களும், மல்லாவி வர்த்தக சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (24)

## சுகாதார சீர்கேட்டால் சிற்றுண்டிச்சாலை மூடப்பட்டது

(வட்டக்கச்சி)

சுகாதார சீர்கேட்டால் தருமபுரம் பகுதியில் சிற்றுண்டிச்சாலை ஒன்று மூடப்பட்டுள்ளது. கடந்த 9ஆம் திகதி தருமபுரம் மக்கள் வங்கிக்கு அண்மையாக உள்ள சிற்றுண்டிச்சாலையில் தமிழீழ சுகாதார சேவையின் பிரதேச சுகாதார இணைப்பாளர் திடீரென மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது சிற்றுண்டிச்சாலையின் சமையல் அறையின் பகுதியில் நீர் தேங்கியும், சுகாதார சீர்கேட்டுடன் உணவு தயாரிக்கப்பட்டு வந்தததோடு, பழுதடைந்த உணவுப் பொருட்களும் காணப்பட்டது.

மற்றும் தற்காலிக மலசல கூடம் கழிவு நீர்க்குழி போன்றன நீர்நிரம்பி துர்நாற்றத்துடன் காணப்பட்டதனாலேயே இச் சிற்றுண்டிச்சாலை தற்காலிக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது என பிரதேச இணைப்பாளர் கூறினார். (12)

## சமகால அரசியல் கருத்தரங்கு

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத்தில் பரவலாக. சமகால அரசியல் கருத்தரங்குகளும் தமிழீழ திரைப்படக் காட்சிகளும் இடம்பெற்று வருகின்றது.

மேற்படி சமகால அரசியல் கருத்தரங்குகளில் கடந்த காலம், சமகாலம், எதிர்காலம் பற்றிய விளக்கங்களை உள்ளடக்கி சமகால நிலையில் எவ்வாறான விழிப்புணர்வுடன் செயற்பட வேணடும் என்ற விளக்கக் கருத்துரைகளை முள்ளியவளை பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.நாகமைந்தன் முல்லை. மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் பூங்குன்றன், மாஸ்ரர் மற்றும் பலர் நிகழ்த்தி வருகின்றனர். கருத்தரங்குகளிலும் படக்காட்சிகளிலும் பெருமளவான மக்கள் கலந்து கொள்கின்றனர். (ஆ)

## கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த வேண்டுகை

பாண்டியன் குளம் துணுக்காய் பிரதேசங்களில் கட்டாக்காலி கால்நடைகளினால் தொல்லைகள் அதிகரித்து வருகின்றன. இதன் போது வயல் நிலங்களில் விளையும் பயிர்களை அழித்தும் வருகின்றன.

பிரதான வீதிகளில் இரவில் தங்கியும் வருவதால் இரவுப் பிரயாணங்களை மேற்கொள்வோர் விபத்துக்களுக்குள்ளாகியும் வருகின்றனர். சம்பந்தப்பட்டவர்கள் உடன் கவனமெடுத்து கால் நடைகளை கட்டுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கேட்கின்றனர். (24)

## 14 ஈழத்தமிழர்கள் தலைமன்னார் வருகை

(மன்னார்)

இந்தியா தூத்துக்குடி மாவட்டம் பாப்பாத்தி அகதி முகாம், திருநெல்வேலி மாவட்டம் தாழையூர் அகதி முகாம்களில் வசித்த 14 பேர் இராமேஸ்வரத்தில் இருந்து சிறிய படகு மூலம் நேற்று முன்தினம் காலை தலைமன்னார் வந்தடைந்தனர். இவர்களில் 9 ஆண்களும், 5 பெண்களும் அடங்குவர்.

இவர்களை தலைமன்னார் பொலிசார் மன்னார் நீதிபதி அப்துல்லா முன்னிலையில் ஆஜர்படுத்தினர். அவர்களின் சொந்த இடமான வவுனியா செட்டிகுளம்-சிறுதோப்பு, பேசாலை, செம்மன்தீவு, வட்டக்கண்டல், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு கிராமஅலுவலர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர். (18)

யாழ்ப்பாணம்




ஜெயந்திரன்

அவுஸ்திரேலிய அணியின் வெற்றிப் பயணத்தைதடுத்து நிறுத்த முடியுமா? ஏன்றால்



அணித்தலைவர் ஸ்ரீவோ தலைமையில் இருந்து தொடர் வெற்றிகளைக் குவித்து வரும அவுஸ். அணி இந்நாள் தலைவர் ரிக்கி பொண் டிங்கினால் தக்கவைகபட்டு வழி நடத்தப்பட்டு வருவது அவ்வணிக்கு கிடைத்த கொடையாக அமைந்துள்ளது.

எதிரணிகளை எப்போதுமே பலமான அணி அளிக்கும் வகையில் வெற்றி கொண்டமை அடுத்து நடைபெற இருக்கும் போட்டியை சுலபமாக்கியுள்ளதுடன் பாகிஸ்தான் அணியை திக்குமுக்காட வைத்துள்ளது.

சிறந்த துடுப்பாட்ட வரிசை, அவுஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர்களுக்கு இணையான பந்து வீச்சு வரிசையை கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கு அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களை பணியவைக்கமுடியாது போனமை, துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறியமை என்பன அவ்வணி தொடர்பில் பல கேள்விகளை எழுப்பியுள்ள போதும் அவுஸ் அணியின்

# வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு?

முடியாதென்ற பதிலே அனைவர் மனங்களிலும் குடிகொண்டுள்ளது.

எதிரணிகளை அச்சுறுத்தி பணிய வைக்கும் (துடுப்பாலும், பந்து வீசசாலும்) அவுஸ்திரேலிய அணி தனது சொந்த மண்ணிலும், அந்நிய மண்ணிலும் எதிரணிகளை இலகுவாக வெற்றி பெறுவது அனைவரையும் ஆச்சரியப் படவைப்பதுடன் எதிரணிகளை அச்சம் கொள்ள வைத்துள்ளது.

இது போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன்னரே எதிரணிகளில் குடிகொண்டு விடுவதால் அவர்களது வெற்றிப்பணி தொடர்வது சுலபமாக அமைந்து விடுகிறது.


அருமை பெருமையாக தோல்விகளை சந்திக்கும் அவுஸ்திரே லிய அணி எதிரணி கலங்கி நிற் கும் வகையில் வெற்றி வாகைசூடு வது ஏனைய கிரிக்கெட் அணிக ளுக்கு அவ்வணியை வெற்றி கொண்டு விட்டால் அது இமாலய வெற்றியாக அமைந்து விடுகிறது.

முன்னாள் அவுஸ்திரேலிய யாக கருதிக்கொள்ளவும் அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் அணியை வழி நடத்துவதில் கைதேர்ந்தவராக திகழ்வதுடன் எதிரணியை வீழ்த்துவதற்கு போட்டியில் ஆரம்ப பந்து வீச்சில் இருந்தே வியூகம் வகுத் துக்கொள்வதிலும் ஏனைய அணித் தலைவர்களில் இருந்து வேறுபட்டவராகக் காணபடுகின்றார்.

அத்துடன் பந்து வீச்சாளர்களை போட்டியின் போக்கிற்கு ஏற்ப மாற்றியமைக்கும் பொண்டிங் வெற்றிகள் குறித்து அதிகம் அலட்டிக் கொள்ளாததுடன் எதிரணி பலமான அணியாக இருப்பதையே பெரிதும் விரும்புகின்றார்.

அண்மையில் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அபார வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா பலமான அணிகளில் ஒன்றான பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தற்போது விளையாடி வருகிறது.

இதன் முதல் போட்டியில் பாகிஸ்தான் அணியை அதிர்ச்சி



திறமையை மேலும் மெருகூட்டியுள்ளது.

வீழ்த்தப்பட முடியாத அணியாக பரிணமித்து நிற்கும் அவுஸ். அணியை பணியவைக்க அணி ஒன்று உருவாகுமா? அவ்வணி உருவாக வேணடும் என்பதே கிரிக்கெட் ரசிகர்களின் இன்றைய எதிர்பார்ப்பாகவுள்ளது.

பங்களாதேஷ் நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி இரு டெஸ்ட் போட்டிகளிலும் இனிங்ஸ் வெற்றியைப் பெற்றுள்ளது.

பெரும்பாலும் இந்த வெற்றி எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இரு போட்டிகளில் ஒன்றையாவது சமநிலைப்படுத்த பங்களாதேஷ் முயலும்

# வெற்றிக்கு ஏங்கும் பங்களாதேஷ்

என எதிர் பார்க்கப்பட்ட வேளையில் இரண்டிலும் இனிங்ஸ் தோல்வியை சந்தித்துள்ளது.

பங்களாதேஷின் தோல்வியை நோக்கும் போது அவ்வணியின்



துடுப்பாட்ட வரிசையை புனரமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. காரணம் பந்து வீச்சாளர்கள் தமது பணியை ஓரளவு திறமையாக செய்திருந்த போதும் துடுப்பாட்ட வீரர்கள் நின்று நிதானித்து ஆடாது ஒரு நாள் போட்டிகள் போன்று ஆடி விரைவில் ஆட்டமிழந்து விடுவதைக் காண முடிந்துள்ளது.

அதாவது முதலாவது டெஸ்ட்டில் இந்தியாவின் முன்னணி வீரர்களான சேவாக், ராவிட், லக்ஸ்மன் ஆகியோரை சுலபமாக வீழ்த்தியதும் அவர்களின் சிறப்பான பந்து வீச்சை எடுத்துக்காட்டியது.

இது போன்றே அவுஸ்திரேலிய அணியையும் ஒரு போட்டியில் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கச் செய்த பங்களாதேஷ் அணிக்கு போதிய திறன் வாய்ந்த துடுப்பாட்ட வீரர்கள் இல்லாத நிலையில் வெற்றியின் கனவை நனவாக்க முடியாதுள்ளது.

இந்த நிலையில் பங்களாதேஷ் அணியின் டெஸ்ட் அந்தஸ்தை நீக்கி விட வேண்டும் என சிலர் கோருவது நியாயமாகிவிடுமோ என்ற அச்சமும் பயிற்றுநர் வட்மோரின் பதவிக்காலம் பற்றிய வினாவும் எழலாம் என்பது உறுதி.

# காற்பந்தின் செல்வந்தர்கள்

உலகில் உதைபந்தாட்டம் முக்கியமான ஒரு விளையாட்டாகும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் இது பெரும் வருமானத்தை ஈட்டித்தருகின்றது. அந்த வகையில் உலகில் நட்சத்



பெக்காம்


திர வீரர்கள் ஒரு வருடத்தில் பெறும் வருமானம் மிகப் பெரியது.

டேவிட்பெக்காம் (இங்கிலாந்து) அணித்தலைவர் 17 மில்லியன் அமெரிக்க டொலா இவர் உலகின் முதல் தர வீரராவார். மஞ்சஸ்டர் யுனைட்டட் கழகத்துக் காக ஆடுபவர் ஆரம்பம் 92 ஆம் ஆண்டு மத்திய கள வீரர். இவர் பெரும்பாலும் நீண்ட உதைக்கே பெயர் பெற் றவர் ஆவார்.

சினடின்சீடென் (பிரான்ஸ் அணித்தலைவர்) இவரின் வருமானம் 14 மில்லியன் டொலர் கேன்ஸ் கழகத்துக் காக 1991-93 வரையும், போர்டோ கழகத்துக்காக 1995 -96 வரையும், 1996-97 இத்தாலியின் யுவன்டஸ் கழகத் துக்காகவும், 2001-04 வரை ரியல் மட்ரிட்டுக்காகவும் ஆடி வருபவர். சகல துறைகளிலும் திறமையை வெளிக்காட்டுபவர். இவர் 2002 ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரராக தெரிவானார்.

ரொனால்டோ (பிரேசில்) (11.7 மில்லியன் டொலர்) இவர் 1994 க்ருஷேரோ கழகத்துக்காக ஆடி அறிமுகமானார். பின்னர் ஸ்பெயின் ,நெதர்லாந்து, இத்தாலி போன்ற நாடுகளின் கழகங்களுக்காகவும் விளையாடியுள்ளார். இவர் 5 ஆவது தடவையாகவும் பிரேசில் உலகக் கிண்ணத்தை வெல்லக்காரணமானவராவார்.

றியோ பர்டினன்ட் (இங்கிலாந்து) இவரின் வருமானம் 9.62 அமெ ரிக்க டொலர் ஆகும். 1991 முதல் 2001 வரை வெஸ்ட் ஹாம் யுனைட் டட்



ஹென்றி



ரொனால்டோ

கழகத்துக்காக ஆடினார். இவர் கடந்த உலக கிண்ணத் தொடரில் விசேட திறமை காட்டினார்.

அலெக்ஸாண்ரோ டெல்பியாரோ இத்தாலியரான இவரின் வருமானம் 9.55 மில்லியன் டொலர்களா கும். 1991 முதல் 93 வரை பெடோவா கழகத்துக்காகவும், 94 ஆம் ஆண்டு யுவான்டஸ் கழகத்துக் காகவும் விளையாடி னார். இன்று உலகில் உள்ள முன்னரங்க வீரர்கள் வரி சையில் அங்கம் வகிக் கும் திறனான வீரராவார்.

ஹிடோசி நகாடா (யப்பான்) இவரின் வரு மானம் 9.36 மில்லியன் டொலர் ஆகும். இவர் 1995 முதல் 98 வரை யப்பானின் பெல்மாரி ஹிராட்சுகா அணிக் காக விளையாடினார். 1998 முதல் 2000 வரை இத்தாலியின் பெரு ஜியா அணிக்காகவும் 2001 முதல் 2002 வரை ரோமா அணிக் காகவும் ஆடினார்.



ஹிடோசிநகாடா

ராவுல் கொன்சலஸ் ஸ்பெயினை சேர் ந்த இவரின் உழைப்பு 9.30 மில்லியன் அமெ. டொலர்களாகும் 1994 முதல் 95 வரைறியல் மட்ரிட் அணிக் காக ஆடினார்.

கிறிஸ்டின் வியறி இவரும் இத்தாலியைச் சேர்ந்தவர். 1989 ஆம் ஆண்டு பிராடே அணியில் இணைந்து 90 ஆம் ஆண்டு வரை பங்கேற்றார். 91 முதல் 93 வரை டொறினோ அணிக்கா கவும் 93 இல் பீசா அணிக்காகவும், 94-95 ஆம் ஆண்டு வெனிசியா கழகத் துக்காகவும், 96-97 காலப் பகுதியில் யுவான்டஸ்க்காகவும் 97-98 காலப்பகுதியில் அட்லான் டிகோ மட்ரிட் கழகத் துக்காகவும் 1999-2000 வரை மிலான் அணிக்காகவும் ஆடினார்.



பெக்கம்-சினடின்சீடென்

றோய்கீன், அயர்லாந்தைச் சேர்ந்த 1990 முதல் 93 வரை நெட்டிங்காம் பொரஸ்ட் கழகத் துக்காகவும், 93 முதல் 94 வரைமஞ்செஸ்டர் கழகத்துக் காகவும் ஆடினார். இவரின் வருமானம் 8.65 மில்லியன் டொலர்ஆகும்.இவரும் குறிப் பிடத் தக் கமத் தியவரிசை ஆட்டக்காரராவார்.

# புலிகள் தனியரசு அமைக்கும் பாதையை திறக்க அரசு வழியமைத்து கொடுத்துள்ளது

## - விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

**இனவாதத்தை கக்கும் ஜே.வி.பி.யுடன் இணைந்து மக்களைத் தூண்டி ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டதன் பின் விளைவுகளை சனாதிபதி தற்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றார் என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.**

உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் ஜே.வி.பி.யினரின் சமாதான எதிர்ப்பு நடவடிக்கையை விமர்சித்துள்ளனர். உண்மையில் இது எதிபார்த்த விடயம்தான் இனவாதிகளின் பிடிக்குள் சிக்கிக் கொண்டுள்ள சனாதிபதியால் சமாதான செயற்பாடுகளுக்காக எதனையும் செய்ய முடியாது. இனவாத ஜே.வி.பி. யுடன் இணைந்து ஆட்சியமைக்க வேண்டாம் என நாம் ஆரம்பத்திலேயே சனாதிபதிக்கு கூறினோம். ஆனால் சனாதிபதி இன வாதிகளுடன் கூட்டணி அமைத்து ஆட்சியமைத்தார். ஐ.ம.சு.முன்னணியால் சமாதான செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதென்பது நிரூபணமாகி வருகின்றது. இந்நிலையில் புலிகள் தனிராஜ்ஜியம் அமைப்பதற்கான பாதை திறக்கவிடப்பட்டுள்ளதாகவே தெரிகின்றது என்றார்.

# வவுனியா மாவட்ட நீதிமன்றில் நிலுவையில் 5000 வழக்குகள்

வவுனியா மாவட்ட நீதிமன்றில் 5000 வழக்குகள் தீர்க்கப்படாமல் நிலுவையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கு பிரதான காரணமாக வழக்குகளுக்கு போதியளவு சாட்சிகள் இன்மை, விசாரணைகளுக்கு வழக்காளிகள், எதிராளிகள் ஒழுங்காக வராமை போன்ற காரணங்களாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் தற்போது இந்த வழக்குகள் தொடர்பாக நீதிமன்றமும், நீதவானும் அதிகளவு கவனம் செலுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (21)

# அரசியலமைப்பு சீர்திருத்தம் அடுத்தமாதம் சமர்ப்பிக்கப்படும்

## - அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு

நிறைவேற்று அதிகாரமுள்ள சிறிலங்கா சனாதிபதி முறை ஒழிப்பு மற்றும் தேர்தல் முறை மாற்றம் அடங்கிய அரசமைப்புச் சீர்திருத்தத்தை அடுத்தமாதம் மூன்றாவது வாரமளவில் பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளில் சனாதிபதி தலைமையிலான அரசுத் தரப்பினர் மும்முரமாக ஈடுபட்டு வருவதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

அரசமைப்புச் சீர்திருத்த வேலைகள் தற்போது மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதனை பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு முன் -அடுத்த மாதம் முதல் வாரமளவில் - அதன் சட்டவலு குறித்துப் பரிசீலிப்பதற்கு சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்போவதாகவும் ஆளும் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த சட்டமூலம் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தால் மட்டுமே நிறைவேற்றப்படலாமாதலால், இந்தச் சட்டமூலத்திற்கு ஐ.தே.க மற்றும் ஜாதிக ஹெல உறுமய எம்.பி.க்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு ஆளும் தரப்பு எம்.பிக்கள் குழு ஒன்று எதிர்க்கட்சி எம்பிக்களின் ஆதரவைத்திரட்டும் வேட்டையில் இறங்கியுள்ளது. எம்.பி.க்கள் எதிரணிக்கு ஆதரவு வழங்கினாலும் அவர்களின் எம்.பி. பதவிக்கு எதுவும் நேர்ந்து விடாத வண்ணம் எம்.பிக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சிறப்புரிமைச் சரத்தும் உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதால் எதிர்க்கட்சியிலிருந்து தமக்குத் தேவையான ஆதரவு நிச்சயம் கிடைக்கும் என்று ஆளும தரப்பு வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன. நடப்பு தேர்தல் முறை மாற்றப்பட்டு ஜேர்மன் முறையிலான தேர்தல், முறை உத்தேச அரசியல் சீர்திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவை மேலும் தெரிவித்தன.

# திஸாநாயக்கவின் கடிதம் வெளியிடப்படின் உயர் நீதிமன்றின் மீதான நம்பிக்கை வீழ்ச்சியுறும்

## - ஐ.தே.க.பா.உ ராஜித சேனாரட்ன

சிறையில் அடைக்கப்பட்டுள்ள எஸ்.பி திஸாநாயக்க அவருடைய சட்டத்தரணிக்கு எழுதியுள்ள விடயங்களை வெளிப்படுத்தினால் இந்த நாட்டின் உயர் நீதிமன்றம் தொடர்பில் மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையில் வீழ்ச்சி ஏற்படும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் ராஜிதசேனாரட்ன எஸ்.பி திஸாநாயக்காவுக்கும் பிரதம நீதியரசருக்கும் இடையில் இடம்பெற்ற கருத்துப் பரிமாற்றங்களின் அடிப்படையிலேயே எஸ்.பி திஸாநாயக்க தாம் நீதிமன்றம் தொடர்பில் வெளியிட்ட கருத்தில் பிழை இருக்குமானால் அது தொடர்பில் மன்னிப்புக் கோரியதாக தெரிவித்தார்.

எனினும் இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் எவரும் உடன்படாத போதும் எஸ்.பி திஸாநாயக்க தனித் தீர்மானத்தின் அடிப்படையில் இந்தப் கருத்துப் பரிமாற்றத்தைக் மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

இந்தக் கருத்துப் பரிமாற்றத்திற்காக எஸ்.பி திஸாநாயக்கவின் சட்டத்தரணியான ரொமேஸ் என்பவரே பிரதம நீதியரசருடன் குறிப்பிட்ட உறுதிமொழியை பெற்றிருந்தார்.

பிரதம நீதியரசரின் உறுதிமொழி கிடைத்தவுடன் அவர் அந்த இடத்தில் இருந்தே அவர் எஸ்.பி திஸாநாயக்கவுக்கு அதனைத் தெரிவித்ததாக குறிப்பிட்ட ராஜிதசேனாரட்ன எனினும் சட்டத்தரணி ரொமேஸ் பிரதமநீதியரசரின் உறுதி மொழியில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

இதே வேளை எஸ்.பி திஸநாயக்கவின் மீது நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டை சுமத்தும் வகையில் சமர்ப்பிக்கப்பட்ட ஒலி, ஒளி நாடாவானது மூலப்பிரதி அல்ல எனவும் குறிப்பிட்டார்.

# வாகன கடத்தலுடன் தொடர்புடைய எண்மர் வவுனியாவில் கைது

## - வாகனங்களும் மீட்கப்பட்டன

(செட்டிகுளம்)

வவுனியாவில் வாகனக் கடத்தலுடன் சம்பந்தப்பட்டதாக தெரிவித்து 7 தமிழர்கள் உட்பட 8 பேர் வவுனியா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் இருந்து பேருந்து ஒன்றினை கொள்வனவு செய்ய சிலர் குருணாகல பகுதிக்கு சென்றுள்ளனர். அங்கு இருந்த பெரும்பான்மை இனத்தை சேர்ந்த நபர் ஒருவாரத்தினுள் பேருந்தினை பெற்று தருவதாக கூறி குருணாகல பகுதிக்கு சென்றவர்களை தன்னிடம் இருந்த காரில் வவுனியாவுக்கு ஏற்றி வந்துள்ளார். வவுனியாவுக்கு வந்த அந்த நபர் காரை பேருந்து கொள்வனவு செய்ய சென்ற நபர்களிடம் ஒப்படைத்து விட்டு ஐந்தரை லட்சம் ரூபாவினை பெற்றுக்கொண்டு சென்றுள்ளார். மீண்டும் ஒரு வாரத்தின் பின்னர் மீண்டும் வந்த அந்த நபர் மேலும் ஒரு காரினை கொடுத்து விட்டு மூன்றறை லட்சம் ரூபாவினை கோரியுள்ளர். எனினும் அவர்களிடம் அதிகளவு பணமில்லாமையால் இருந்த பணத்தினை பெற்று கொண்டு சென்று உள்ளார்

இந்த தகவல் பொலிசாருக்கு ரகசியமாக கிடைத்தவுடன் அவர்கள் வவுனியாவில் உள்ள 7 பேரையும் மற்றயவரினையும் கைது செய்து விசாரித்துள்ளனர். இதன் போது பல உண்மைகள் வெளியாகியுள்ளன. பிரதான சந்தேக நபர் கொழும்பில் இருந்து வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி அதனை கடத்திபின்னர் பிற மாவட்ட்ங்களுக்கு விற்பனை செய்பவர் என்று பொலிசார் கண்டறிந்துள்ளனர். இவர்கள் தற்போது பொலிசாரினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து கைப்பற்றப் பட்டுள்ள கார்கள் இரண்டும் உந்துருளி ஒன்றும் 50 லட்சம் பெறுமதி என்று தெரிவிக்கப்படுகிறது. (21)

## அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

ஐ.ம.சு.முன்னணி அரசாங்கம் சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு சுகாதார ஊழியர்களுக்கு மறுக்கப்பட்டால் வேலை நிறுத்தத்தில் குதிப்போம் என சுகாதார சேவைகள் தொழிற்சங்க சம்மேளனம் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சனவரி மாதம் 05ஆம் திகதி சுகாதார அமைச்சு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதுடன் 6ஆம் திகதி முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போவதாகவும் சுகாதார சேவைகள் தொழிலாளர்கள் சங்க சம்மேளனத்தின் தலைவர் சமன் சந்தன பிரிய தெரிவித்தார்.

இது குறித்து கடந்த 15ஆம் திகதி கொழும்பில் கூட்டம் நடைபெற்றது. இதிலேயே மேற்கண்ட் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன என ரத்தினபிரிய தெரிவித்துள்ளார்.

# அறிவித்தல்

ஏ-9 வீதியின் மத்தியிலிருந்து 66 அடிக்குள் புதிதாகக் கட்டடம் கட்டவோ கட்டடத்தை திருத்தவோ அனுமதியளிக்க முடியாதென்பதையும் ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதிகள் யாவும் இரத்துச் செய்யப்படுகின்றதென்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் வீதியோரங்களில் அனுமதியின்றி 'கிரவல்' பறிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். தற்போது அமைக்கப்படும் வடிகால்களை மூடுவதும் பொருத்தமற்ற குழாய்களைப் பொருத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது. உணவகங்கள் யாவும் சுகாதார ஒழுங்கின் படி அமைக்கப்பட்டாலே உரிய அனுமதி வழங்கப்படும். அத்துடன் கழிவுநீர்த் தொட்டி, ஊழியர்களுக்கான ஓய்வறை, கழிப்பறை என்பன அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இச் செயற்பாடுகள் யாவும் 2005.01.01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

*பொன். நித்தியானந்தம்,*
*விசேட ஆணையாளர்,*
*கரைச்சிப் பிரதேச சபை,*
*கிளிநொச்சி.*

*கரைச்சிப் பிரதேச சபை,*
*கிளிநொச்சி,*
*19. 12. 2004.*

(சி.10987)


டய்டோ
பிறப்பிலே முன்னணியில்...
FANCY



▸ 100CC ▸ 4 Gear
▸ Kick & Self Start

(சி-10986)

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO

எங்களிடம் தாராளமாக Honda, Yamaha, Suzuki, Bajaj, Daido, Yamato மற்றும் எல்லா சீன தயாரிப்புகளுக்கு பொருந்தும் உதிரிப்பாகங்கள் வேண்டிய அளவில் கிடைக்கும்




ஏக முகவர்

செரென்டிப் மோட்டர் என்டர்பிறைஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு - 10.

தொலைபேசி 01-2341580-1, 2438779, பக்ஸ் 01-2454608 E-mail: zme@slt.lk

# ஒரிசாவில் நாயின் எச்சில் பட்ட உணவை உட்கொண்ட மாணவர்களுக்கு ரேபிஸ்?

(புதுடில்லி)

**ஒரிசாவில் ஆரம்பப் பள்ளியொன்றில் தெருநாய் எச்சில் பட்ட உணவு 36 குழந்தைகளுக்குத் கொடுக்கப்பட்டதால் அவர்களுக்கு ரேபிஸ் ஏற்படலாம் என்ற பீதி ஏற்பட்டுள்ளது.**

கேந்திர பாரா அருகேயுள்ள பஜார் கிராமத்தில் ஆரம்பப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது. சமையல் கூடத்தில் தெருநாய் ஒன்று வியாழக்கிழமை நுழைந்தது சமைத்து வைக்கப்பட்டிருந்த உணவை அது சாப்பிடத் தொடங்கியது. அந்நாயை விரட்டிய சமயற்காரர் அதே உணவை குழந்தைகளுக்கு வழங்கினர். அவர்களும் அதைச் சாப்பிட்டனர். இச்சம்பவத்தைப் பள்ளிக் குழந்தைகள் சிலரும் பார்த்தனர். ஆனால் தலைமை ஆசிரியருக்கு எவரும் தகவல் தெரிவிக்கவில்லை. இச்சம்பவம் குறித்து சில குழந்தைகள் தங்கள் பெற்றோரிடம் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து குழந்தைகளுக்கு ரேபிஸ் நோய் ஏற்படுமோ என்ற அச்சம் ஏற்பட்டது. உணவு சாப்பிட்ட குழந்தைகளை கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்துக்குப் பெற்றோர் அழைத்துச் சென்றனர். அவர்களுக்கு ரேபிஸ் தடுப்பு உசி போட வேண்டுமா என்பதை அங்குள்ள மருத்துவரால் கூற முடியவில்லை.


அவர்களை மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது குழந்தைகளுக்கு ரேபிஸ் ஏற்படும் வாய்ப்பு இருக்கக்கூடும் என்ற சந்தேகம் மருத்துவர்களுக்கு எழுந்தது.

இச்சம்பவம் குறித்து கட்டாக்கில் உள்ள மருத்துவக் கல்லூரியில் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. நாய் எச்சில் பட்ட உணவைச் சாப்பிட்ட அனைத்து குழந்தைகளுக்கும் ரேபிஸ் தடுப்பு ஊசி போடப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பேருந்து பள்ளத்தில் விழுந்ததில் 16 பேர் பரிதாப மரணம்!

(புதுடில்லி)

பீகாரில் பேருந்து ஒன்று பள்ளத்தில் உருண்டு விழுந்து 16 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். இச்சம்பவம் கிழக்குப் பீகாரில் சம்பரன் மாவட்டத்தில் சில்ஜாப்பூர் பாலமருகே கடந்த சனிக்கிழமை இரவு நடந்தது என்று பொலிசார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம்



நடந்த இடத்தில் 10 பேரும் மருத்துவ மனையில் 6 பேரும் உயிரிழந்ததாக மாவட்டப்பொலிஸ் எஸ்.பி. கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்.

படுகாயமடைந்த 2 பேர் பாட்னா மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். 25 பேர் உள்ளூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். கடும் பனி மூட்டத்தினால் பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்ததால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. நேபாளத்தில் உள்ள கரிமாய் கோயிலுக்குச் சென்றுவிட்டு முசாபர்பூர் மாவட்டத்தில் உள்ள சாகேப்கஞ் என்ற இடத்திற்கு திரும்பிக்கொண்டிருக்கையில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாராளுமன்ற நடவடிக்கைகளை பா.ஜ.க தடைசெய்யவில்லை!

**- கட்சியின் மூத்த தலைவர் கூறுகிறார்**

(புதுடில்லி)

பாராளுமன்ற நடவடிக்கைகளை பா.ஜ.க வேண்டுமென்றே தடைசெய்யவில்லை என்று அக்கட்சியின் மூத்த தலைவர் பிரமோத் மஹாஜன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக நிருபர்களிடம் அவர் நேற்று முன்தினம் கூறுகையில். மக்களவைத் தலைவர் சோமநாத்சட்டர்ஜி பதவி விலகுவதாக அறிவித்துள்ளது ஏனென்று தெரியவில்லை. மக்களவையில் அமளி ஏற்படுவது புதிதல்ல. இதற்கு முன்னைய மக்களவைத் தலைவர்களும் இதே பிரச்சினையைச் சந்தித்துள்ளனர். எனவே மக்களவையில் அமைதி ஏற்படுவதால் சோம் நாத் பதவி விலக முடிவு செய்திருந்தால் அது சரியல்ல.

# பீகார் சிறைச்சாலைக் கைதிகளிடம் பல்வேறு தடைசெய்யப்பட்ட பொருட்கள்

பீகாரில் சிறையில் இருக்கும் கைதிகள் சிறைக்கு வெளியே தங்கள் குழுவை வைத்துக் கொண்டு, கொலை, கொள்ளை, ஆள் கடத்தல் போன்ற சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவதாக பாட்னா மேல்நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதிகள், பீகார் சிறையில் உடனடியாக சோதனை நடத்தும்படி உத்தரவு இட்டனர். இதைத் தொடர்ந்து தலைநகர் பாட்னா மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் உள்ள சிறைகளில் உயர் பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் சோதனை நடத்தப்பட்டது.

24 மணி நேரத்துக்கும் மேலாக இந்தச் சோதனை நடைபெற்றது. அப்போது சிறைக் கைதிகளிடம் இருந்து கையடக்கத் தொலைபேசி, கத்தி, கஞ்சா மற்றும் தடை செய்யப்பட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இது குறித்துப் பீகார் சிறைத்துறை மந்திரி ராகவேந்திரா பிரதாப்சிங் கூறியதாவது;

சிறைகளில் நடந்த சோதனைகள் பற்றிய அறிக்கையைக் கேட்டு இருக்கிறேன். தவறு செய்த மற்றும் தவறுக்குக் காரணமாக இருக்கும் சிறை அதிகாரிகள், ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

தர்பாங்கா சிறையில் கஞ்சா, குட்கா, சிகரெட்டு பெட்டிகள் கைப்பற்றப்பட்டன. முசாபாபூர் சிறையில் வானொலிகள், மது நிரப்பப்பட்ட குளிர்பானப் போத்தல்கள் சிக்கின எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பணத்துக்காகக் கொலை செய்யும் அவசியம் எனக்கில்லை

**- கைதான அப்பு தெரிவிப்பு**



நான் ஒன்றும் கொலைகாரன் இல்லை. பெரிய தொழில் அதிபர் தேவையான சொத்துக்கள் எனக்கு இருக்கிறது. வருடத்துக்கு ரூ.3 இலட்சம் வருமானவரி செலுத்துகின்றேன் 10 வருடமாக இவ்வாறு வருமான வரி கட்டி வருகின்றேன்.5இலட்சம்,10 இலட்சத்திற்கு ஆசைப்பட்டு சாதாரணமாக சைக்கிளில் போகும் ஒரு ஆளைக் கொலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை.இலட்சக்கணக்கில் வருமான வரி கட்டும் எனக்கு பணத்துக்கு ஆசைப்பட்டு கொலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. எனக்கூறுகிறார். பொலிசாரால் இவர் கைது செய்யப்படுவதற்கு முன்னர் தொலைக்காட்சி ஒன்றிற்கு இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்.

**கேள்வி:-** ஜெயேந்திரருடன் உங்களுக்கு நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அவருக்காக இந்தக் கொலையைச் செய்தீர்களா?

**பதில்:-**சங்கரமடத்துக்கு கோடிக் கணக்கில் சொத்து இருக்கிறது. அவர் எனக்கு பணம் கொடுத்து கொல்லச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அந்தப்பணத்தை சங்கரராமன் மீது வீசியிருந்தால் அவரே அதை எடுத்துக் கொண்டு ஓடியிருப்பார்.தொல்லை கொடுத்து இருக்கமாட்டார்.

ஜெயேந்திரர் சாமிகள் கூட இந்தத் தப்புச் செய்து இருக்கமாட்டார். நான் யாருக்கும் பயந்து ஓடி ஒளிய வேண்டிய அவசியம் இல்லை.

என்னைக் கொலைகாரன் என்றும, கூலிப்படை வைத்து இருக்கிறேன் என்றும், தவறான தகவல் பரப்பி விட்டு இருக்கிறார்கள்.பொலிசாரும் என்னை தேடுவதாக அறிந்தேன்.

நான் ஓடி ஒளிய வேண்டிய அவசியம் இல்லை.என்னை இதில் சிக்க வைக்க பெரிய சதி நடந்து இருக்கிறது. அதில் அரசியல் வாதிக்கும் தொடர்பு இருக்கிறது. அது யார் என்று பின்னால் சொல்வேன்.நான் நிரபராதி, நியாயம், தர்மம் வெல்லும், என்மீதான பழியில் இருந்து மீண்டு வருவேன் என்றார்.

## புதுடில்லி பயணம்

மலேசியப் பிரதமர் அப்துல்லா அகமது பதாவி ஐந்து நாள் அரச முறைப்பயணமாக நேற்று முன்தினம் புதுடில்லிசென்றுள்ளார்.

இந்தியா-மலேசியா இடையிலான இரதரப்புப் பொருளாதாரக் கூட்டுறவை வலுப்படுத்தும் மற்றும் விரிவுபடுத்தும் நோக்கில் இவரது விஜயம் அமைந்துள்ளது.

# இந்.பாராளுமன்ற சபாநாயகரை சர்வாதிகாரி என்று நாம் கூறவில்லை

***- முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தெரிவிப்பு***

பாராளுமன்றம் சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி மீது எதிர்க்கட்சிகளுக்கு முழு நம்பிக்கை உள்ளதென்றும், அவர் சர்வாதிகாரி என்று குற்றம் சாட்டவில்லை என்றும் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற சபாநாயகர் சாட்டர்ஜி கடந்த வெள்ளி ஒரு திடீர் அறிவிப்பை வெளியிட்டார். அதில் தன்னை சர்வாதிகாரி என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுவதாகவும் தன்னுடைய செயற்பாட்டில் எம்.பிகளுக்கு மகிழ்ச்சி இல்லை என்றால் தாம் பதவி விலகத் தயார் என்றும்சாட்டர்ஜி உருக்கமாகக்கூறியிருந்தார். இதற்கு முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பதிலளித்துள்ளார். சனி காலை பாராளுமன்ற கூட்டத்தில் கலந்து கொண்டு வெளியே வந்த அவர் நிருபர்களிடம் கூறுகையில், “சபாநாயகருக்கு எதிராக நாங்கள் எதையும் சொல்லவில்லை. நாங்கள் இந்த அரசின் சர்வாதிகாரத்தைப் பற்றித்தான் விவாதித்தோம். மற்றும்படி அவர் மீது எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது” என்று விளக்கமளித்தார்.

எதிர்க்கட்சித்தலைவர்கள் சொன்னால் பதவி விலகுவதாகச் சபாநாயகர் கூறியிருப்பதைப் பற்றி நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்று கேட்டபோது, “ நான் அந்த விடயத்துக்குள் போக விரும்பவில்லை எங்களைப் பற்றி அவர் ஏராளமாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் ரயில்வே அமைச்சர் லல்லு பற்றி எதுவுமே சொல்லவில்லை ” என்றும் வாஜ்பாய் குறிப்பிட்டார். பஞ்சாப்பில் ரயில் விபத்துப் பற்றி பாராளுமன்றத்துக்கு வந்து விளக்கம்தருவதாக லல்லுப்பிரசாத் சொன்னார். ஆனால் அவர் வராதது துரதிர்ஷ்டம் என்றும் வாஜ்பாய் குறிப்பிட்டார். சபைக்கு வருவதாக லல்லுப்பிரசாத் உறுதியளித்தார். ஆனால் அவர் வராததால்தான் சபையில் இத்தனையும் நடந்தது. என்று வாஜ்பாய் வருத்தத்தோடு கூறினார்.

# சேதுசமுத்திரத் திட்டம் தொடர்பாக மீனவர்களுக்கு விளக்க புதிய அமைப்பு

சேது சமுத்திரத்திட்டம் குறித்து மீனவ மக்களுக்கிடையே உண்மை நிலையை வெளிப்படுத்தும் வகையில் தூத்துக்குடி மீனவர்கள் ஆதரவு இயக்கமொன்றை ஆரம்பித்துள்ளனர். தூத்துக்குடி வடபகுதி மீனவர்களின் சேதுசமுத்திரத் திட்ட ஆதரவு இயக்கம் என்று இதற்குப் பெயரியிட்டுள்ளது. தூத்துக்குடிக்கு வடக்கே உள்ள பறவைக்குளம் வள்ளாப்பிட்டி உள்ளிட்ட 20 மீனவ கிராமங்களைச் சேர்ந்தவர்கள் இந்த இயக்கத்தில் இணைந்துள்ள னர்.

சேதுசமுத்திரத்திட்டத்தால் மீனவர்களுக்கும் மீன் வள்ளத்திற்கும் எவ்வித பாதிப்பும் இல்லை என்ற உண்மை நிலைபற்றி ஆதரவு திரட்டும் பிரசார இயக்கத்தையும் தொடக்க இவர்கள் திட்டமிட்டுள்ளனர். இத்திட்டத்தால் மீனவர்களுக்கு மாற்று வழியிலான வேலைவாய்ப்பும் ஏற்படும் என்று உணர்த்தப் போவதாகஇந்தஇயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.


# வீரவணக்கம்

**04 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்**

தாயின் மடியில் 10 - 08 - 1976



தாயக மண்ணில் 19 - 12 - 2000

தமிழீழத் தேசியத்துணைப்படைவீரர்

## ஜோன்சன்

*அருளானந்தம் ஜோன்சன்*

நி.மு. யாழ் மாவட்டம்

த.மு.யாழ். மாவட்டம்

கடந்த 19.12.2000 அன்று மணலாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலின்போது வீரச்சாவடைந்தார். இம்மாவீரருக்கும் இந் நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**“தமிழீழத் தேசியத்துணைப்படையினர்”**

(5424)

## ஐரோப்பாவின் சிறந்த கால்பந்து வீரராக ஹென்றி




வாக்கெடுப்பில் முன்னர் ஆர்சனல் வீரர் மிலான் வீரரை வென்று முன்னணி வகித்த போதிலும் ஐரோப்பிய வீரர் தியரி ஹென்றி அனைவரையும் வென்றுவிட்டார்.

2003 ஆம் ஆண்டு சினடின்சிடானை வென்றவர் 1999 இல் யுவான்டஸிடம் ஏமாந்தார்.

27 வயதான ஹென்றி கடந்த காலப்பகுதியில் 38 கோல்களைப் போட்டார். 2003 ஆம் ஆண்டு றொனால்டோ மட்டுமே ஐரோப்பிய, உலகக் கிண்ணங்களை வெல்லக்காரணமானார் 1991 இற்குப் பின்னர் மூன்று முறை சிறந்த வீரர் விருதுகளைப் பெற்றவர்கள் றொனால்டோவும், சிடானேயும் மட்டுமே.

## பிரபல டென்னிஸ் வீரர் ரோஜர்பெடரர் பயிற்சிபெற அவுஸ்திரேலியா பயணம்



அவுஸ்திரேலியாவில் அடுத்தமாதம் நடை பெறவுள்ள ஓபன் டென்னிஸ் போட்டிக்குத் தயார்படுத்தும் வகையில் பயிற்சியிலீடு படுவதற்காக பிரபல டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் சிட்னி சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுவிஸ் நாட்டைச் சேர்ந்த இவர் மெல் பேர்னில் நடை பெறும் போட்டிகளில் பங் கேற்பார். இவர் 2003 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எதுவித பயிற்சியாளரிடமும் பயிற்சி பெறாதிருந்தார். இவருக்குடொனி ஹாக்கியிடம் பயிற்சி வழங்குவார்.

ரொக்கி முன் னாள் அவுஸ்திரே லிய டேவிஸ் கிண்ண வீரராவார்.இவர் பிரான்ஸ் ஓபன், அமெ ரிக்க ஓபன், விம்பிள் டன் இரட்டையர் போட்டிகளில் வென்ற வராவார்.இவர் முன்னாள் முதல்தர வீரரும், கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற வருமான ஐவன்லெண்டிக்கும் பயிற்சிய ளித்துள்ளார்.

## அவுஸ்திரேலிய அணியில் மாற்றமில்லை

பாகிஸ்தானுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் டெஸ்ட்டில் ஆடிய வீரர்களே ஆடுவர் என அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

இரண்டாவது போட்டி மெல்பேனில் வரும் ஞாயிறு ஆரம்பமாகும். மெல்பேன் மைதானம் தொடர்பாக முன்னர் சந்தேகங்கள் எழுந்த போதும் தற்போது அங்கு இரண்டாவது டெஸ்ட் போட்டி நடை பெறுவது உறுதியாகிவிட்டது.

## இங்கிலாந் வெற்றிபெற 142 ஓட்ட இலக்கு

தென்னாபிரிக்க இங்கிலாந்து அணிகளுக்கிடையில் போர்த் எலிசபெத்தில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற 142 ஓட்ட இலக்கை நிர்ணயித்துள்ளது தென்னாபிரிக்கா.

88 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இனிங்சை ஆடிய தென்னாபிரிக்க 219 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து. வெற்றி இலக்கை நோக்கி ஆடும் இங்கிலாந்து நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது.

## பங்களாதேசுக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டி; ஒரு இனிங்ஸ் 83 ஓட்டங்களால் இந்தியா வெற்றி



பங்களாதேஷ் இந்திய அணிகளுக்கிடையில் சிட்டகொங்கில் நடைபெற்று வந்த இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி ஒரு இனிங்ஸ் 83 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இவ் வெற்றி மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட தொடரை 2-0 என்ற நிலையில் இந்தியா கைப்பற்றியது.

போட்டியின் நான்காம் நாளான நேற்று இரண்டாவது இனிங்சில் 9 விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டத்துடன் ஆட்டத்தைத் தொடர்ந்த பங்களாதேஷ் 124 ஓட்டங்களைப் பெற்று மிகுதி ஒரு விக்கெட்டையும் இழந்து இனிங்ஸ் தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் ஜுபையர் அதிகபட்சமாக 31 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பதான் 5 விக்கெட்டுக்களையும், கும்ளே, ஹர்பஜன்சிங் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், சச்சின் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தியா முதல் இனிங்ஸில் 540 ஓட்டங்கள், கம்பீர் 139, ராவிட் 160, கங்குலி 88 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றனா.

பந்து வீச்சில் ரபிக் 4 விக்கெட்டுக்களையும், மொட்சயா 3 விக்கெட்டுக்களையும், குசேன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். பங்களாதேஷ் முதல் இனிங்ஸ் 333 ஓட்டங்களையும், மொகமட் அஷ்ரப்புல் ஆட்டமிழக்காது 158 ஓட்டங்களைப் பெற்றனர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக அஷ்ரப்புலும், போட்டித் தொடர் நாயகனாக இர்பான்பதானும் தெரிவாகினர்.


இத்தோல்வி பங்காளதேஷ் அணி சந்திக்கும் 31ஆவது டெஸ்ட்



தோல்வியாகும். இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஒரு நாள் போட்டித் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி சிட்டகொங்கிலும், இரண்டாவது போட்டி 26 ஆம் திகதி அதே மைதானத்திலும் மூன்றாவதும் இறுதியுமான போட்டி டாக்காவில் 27 ஆம் திகதி பகல், இரவாகவும் நடைபெறவுள்ளன.

## டெஸ்ட் போட்டியில் 500 விக்கெட் வீழ்த்துவதும் உலகக்கோப்பையில் விளையாடுவதுமே அடுத்த இலக்கு

### மெக்ராத்



"டெஸ்ட் கிரிக்கெட்டில் 500 விக்கெட் வீழ்த்துவதே அடுத்த இலக்கு. இப்போதைக்கு ஓய்வுபெறும் உத்தேசம் எதுவும் இல்லை. 2007 உலகக் கோப்பைப் போட்டியில் விளையாடக் காத்திருக்கிறேன்" என்கிறார் அவுஸ்திரேலியாவின் மெக்ராத்.

நேற்று முன்தினம் பாகிஸ்தானுக்கு எதிராக துல்லிய வேகப் பந்துவீச்சை வெளிப்படுத்திய இவர், அணிக்கு பிரமாண்ட வெற்றியைத் தேடிக்கொடுத்தார். 34 வயதான இவர் தற்போது 472 விக்கெட் வீழ்த்தியுள்ளார். நேற்று முன்தினம் வெறும் 24 ஓட்டங்களைக் கொடுத்து 8 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய இவர் , சிறந்த பந்து வீச்சை வெளிப்படுத்திய இரண்டாவது அவுஸ்திரேலிய வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

இந்த அணியின் ஆர்தர் மெய்லி 1920-21 இல் இங்கிலாந்துக்கு எதிராக 9/121 விக்கெட் வீழ்த்தி முதல் இடத்தில் உள்ளார். மெக்ராத் கூடுதலாக இரண்டு விக்கெட் வீழ்த்தி இருந்தால் கும்ளே(இந்தியா),ஜிம்லேக்கர் (இங்கிலாந்து) வரிசையில் ஒரே இன்னிங்சில் 10 விக்கெட் வீழ்த்தி சாதித்திருக்கலாம்.

தனது மகத்தான செயற்பாடு குறித்து மெக்ராத் கூறுகையில்," முதல் ஓவரை வீசும் போது மிகவும் சோர்வாக இருந்தேன். ஆனால் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து விழ புதுத்தென்பு பெற்றேன். இப்போதைக்கு ஓய்வுபெறும் உத்தேசம் இல்லை. டெஸ்டில் 500 விக்கெட் வீழ்த்தியுள்ள வோல்ஷ் (மேற்கிந்தியத்தீவு), வோர்ண் (அவுஸ்திரேலியா), முரளிதரன் (இலங்கை) ஆகியோர் வரிசையில் இடம்பெற முடியும் என்று நம்புகிறேன். இதுவே எனது அடுத்த இலக்கு. 2007 உலகக் கோப்பைப் போட்டிவரை விளையாட விரும்புகிறேன்" என்றார்.

## அமரர் பூஜீதா ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி அரையிறுதிப் போட்டிகள் இன்று ஆரம்பம்

கனகபுரம் விளையாட்டுக்கழக அனுசரணையுடன் நடாத்தப்பட்டுவரும் அமரர் சத்திய தர்சன் பூஜிதா (பூஜா) ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.

கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் நேற்று நடைபெற்ற மூன்று போட்டிகளில் முதலாவது போட்டியில் இளைஞர் வட்ட அணியை எதிர்த்தாடிய கனகபுரம் அணி 44 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கனகபுரம் 82 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய இளைஞர் வட்டம் 11 ஓவ ரில் 38 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.





இரண்டாவது போட்டியில் கிருஷ்ணபாரதி அணியை எதிர்த்தாடிய தர்மபுரம் இளந்தாரகை அணி 31 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய இளந்தாரகை நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து.81 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய கிருஷ்ணபாரதி 50 ஓட்டங்களையே பெற்றது.

மூன்றாவது போட்டியில சோலை அணியை எதிர்த்தாடிய உருத்திரபுரம் உழவர் ஒன்றிய அணி 3 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய உழவர் ஒன்றியம் 14 ஓவர் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும். இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய சோலை 14.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 62 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. மேற்படி போட்டி 15 ஓவர்கள் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. நேற்றைய நாளிதழில் உழவர் ஒன்றிய அணி தோல்வியுற்றது எனப் பிரசுரமானது தவறானது. இப்போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக சுபானந், குமார் ஆகியோர் கடமையாற்றினர்.

## புனே சர்வதேச மரதன்போட்டி கென்ய வீரர் குவாண்டரு சாம்பியன்




19 ஆவது சர்வதேச புனே மரதன் போட்டியில் ஆண்கள் பிரிவில்கென்யவீரர் டக்ளஸ் மலாங்கி குவாண்டருவும், பெண்களுக்கான அரை மரதன் போட்டியில் கென்ய வீராங்கனை ஜேன் முவாலும் சம்பியன் பட்டத்தை வென்றனர்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள புனே நகரில் நேற்று 19 ஆவது சர்வதேச மரதன் போட்டிகள் நடைபெற்றன.

ஆண்களுக்கான முழு மரதன் போட்டியில் கென்ய வீரர் குவாண்டரு இந்தத் தூரத்தை (49.195 கி.மீ) 2மணி 21 நிமிடம் 22வினாடிகளில் கடந்து முதலிடம் பெற்றார்.

முதலிடம் பிடித்த குவாண்டருக்கு ரூ.2.5 இலட்சம் பரிசுத் தொகையும், ஒரு சான்றிதழும் ஒரு பதக்கமும் பரிசாக வழங்கப்பட்டது மற்றொரு கென்ய வீரரான பேட்ரிக் மஷானி மைராகி 2ஆவது இடத்தையும், தென்ஆபிரிக்க வீரரான விளாடிமிர் கொடோவ் முன்றாவது இடத்தையும் பிடித்தனர்.பேட்ரிக் ஷோனி இந்த தூரத்தை 2.22.06 நிமிடங்களிலும், விளாடிமிர் கொடோவ் இந்த நேரத்தை 2.22.56 நிமிடங்களிலும் கடந்தனர்.பெண்களுக்கான அரை மரதன் போட்டியில், கென்ய வீராங்கனை ஜேன்முலா இந்த தூரத்தை 1.17.59 நிமிடங்களில் கடந்து முதலாவதாக வந்தார். முதலிடம் பிடித்த இவருக்கு பரிசுத் தொகையாக ரூ.1 இலட்சமும், ஒரு சான்றிதழும் மற்றும் ஒரு பதக்கமும் வழங்கப்பட்டன.



**சிந்தனைக்கு**

இராணுவ ஆதிக்கத்திற்கும், அழுத்தத் திற்கும் புலிகள் இயக்கம் என்றுமே விட்டுக் கொடுத்ததில்லை; கொண்ட கொள்கையில் நாம் என்றுமே வளைந்து கொடுத்ததில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 21-12-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## தீர்மானிக்கும் காலகட்டம்!

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போரா? சமாதானமா? என்பதைத் தீர்மானம் செய்ய வேண்டியதொரு காலகட்டத்தில் உள்ளார். இந்நிலையில் அவர் போரையா? சமாதானத்தையா? தெரிவு செய்தவதற்கான வாய்ப்புண்டு ? என்பது பல தரப்பிலும், பல மட்டத்திலும் முக்கியமாக அலசப்படும் ஒன்றாகியுள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க யுத்தத்திற்கு ஒரு போதும் செல்லமாட்டார். அரசாங்கத்திற்கு மீண்டும் யுத்தத்திற்குச் செல்லும் திட்டம் எதுவும் இல்லை. என சனாதிபதி தரப்பினராலும் ஏன் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் கூட கூறப்படுகின்றது. சனாதிபதி தலைமையிலான சுதந்திரக்கட்சியும் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை விரைவில் தொடங்குவதென்ற தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளது.

ஆனால் சனாதிபதி சந்திரிகாவினால் சமாதானப் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்துச் செல்ல முடியுமா? சனாதிபதி சந்திரிகா விரும்பியோ அன்றி விரும்பாமலோ அதாவது நிர்ப்பந்தத்தின் காரணமாகவே தானும் சமாதானப் பேச்சு வார்த்தையை முன்னெடுக்க முடியுமா? அதாவது அவரது அரசாங்கத்திற்கு இது தொடர்பாகவுள்ள முட்டுக்கட்டையைத்தான் போக்க முடியுமா?

சனாதிபதி சந்திரிகா நிர்ப்பந்தம் காரணமாகவேனும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியாமல் இருப்பதற்கு ஜே.வி.பி யினரே தடங்கல் என்பது வெளிப்படையானது. தற்பொழுது சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தானும் சுட்டிக்காட்டி சனாதிபதி சந்திரிகாவால் ஜே.வி.பி யை சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இசைவாக்கம் செய்து கொள்ளமுடிமா?

ஆனால் இதுவரையில் ஜே.வி.பி நடந்து கொள்ளும் போக்கை அவதானிக்கும் எவருமே ஜே.வி.பி இணக்கப்பாடானதொரு போக்கைக் கடைப்பிடிக்கும் என எதிர்வு கூறுதல் முடியாது. ஏனெனில் ஜே.வி.பி க்கு அத்தகைய தேவையும் பெரியளவில் இல்லை. ஏனெனில் ஜே.வி.பி தற்பொழுது தனக்கு மக்கள் செல்வாக்கு வளர்ந்து வருவதாகக் கருதுகின்றது. தமது கட்சி அதிகாரத்தை மிக விரைவில் கைப்பற்றும் எனவும் கருதுகின்றது.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையோ அன்றி அவரது அரசாங்கத்தையோ பாதுகாக்க வேண்டிய தேவையும் அதற்கு இல்லை. சிறிது காலத்திற்கு இறுதிவரை அரசியலில் நிலையாகக் காலூன்றும் வரையில் சுதந்திரக் கட்சியைப் பயன்படுத்திக் கொள்வதே அதன் நோக்கம். அதற்காகத் தனது கொள்கைகளை அது விட்டுக் கொடுக்க அது தயாராக இல்லை. அதாவது தமது அரசியல்கொள்கையாக வரித்துக்கொண்டுள்ள பௌத்த-சிங்களப் பேரினவாத சிந்தனையை அது மாற்றிக் கொள்ளப்போதுவதும் இல்லை. தேவையும்இல்லை. இதேசமயம் ஆளும் கட்சியின் பங்காளிக் கட்சியாக இருக்கின்றபோதும் ஜே.வி.பி மீது அழுத்தம் எதுவும் ஏற்படுவதற்கான வாய்ப்பும் இல்லை.

இந்நிலையில் சமாதான முயற்சிகளுக்கு ஜே.வி.பி யிடம் இருந்து சனாதிபதி சந்திரிகாவிற்கு ஒத்துழைப்புக் கிட்டும் என எதிர்பார்ப்பதற்கு இல்லை.அது மட்டுமல்ல ஜே.வி.பியின் உதவி இன்றிச் சமாதான முயற்சிகளை மட்டுமன்றி அரசாங்கத்தை நடத்தக் கூடிய வலுவோ அன்றி எதிர்காலத்தில் திட்டமிடும் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய வலுவோ சனாதிபதி சந்திரிகாவிற்கு இருப்பதாகத் தெரியவில்லை.

சுருக்கமாகக் கூறுவதானால் போரா? சமாதானமா? என்பதைத் தீர்மானிப்பதற்கு முன்பாகச் சனாதிபதி சந்திரிகா அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வது பற்றி தீர்மானம் ஒன்றையும் மேற்கொள்ள வேண்டியதாக இருக்கும். அதாவது ஜே.வி.பி யின் துணையின்றி ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வது பற்றிய தீர்மானத்தையும் எடுத்தல் வேண்டும்.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா சமாதானம் என்பதைவிட போரையே தெரிவு செய்வதற்கான வாய்ப்புண்டு. ஏனெனில் ஜே.வி.பி தவிர்ந்த பெரிய கட்சிகளை அவர் அனுசரித்துப் போகும் நிலையில் இல்லை. ஆகையினால் போர் தனியாக ஜே.வி.பி போன்ற கட்சிகளின் ஆதரவைப் பெற்றுத் தருவதாக மட்டுமல்ல எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய அரசியல் நெருக்கடிகள் இடையுறுகள் என்பவற்றையும் வெற்றி கொள்ள அன்றி ஓரம் தள்ளி விட உதவக்கூடியதாகும்.

ஆகையினால் சனாதிபதி சந்திரிகாவும், அவரது கட்சியினரும் சமாதானம் குறித்து எவ்வளவு பேசினாலும் யுத்தமே அவர்களின் தெரிவாக இருக்க முடியும். நாட்டிற்கும் மக்களுக்கும் யுத்தம் எந்த விதமான. பாதிப்பையும், அழிவையும் தேடிக் கொடுப்பினும் அவற்றை ஓரம்தள்ளி விட்டுத் தமது அதிகாரத்தைத், தக்கவைத்துக் கொள்ள ஆட்சியாளர்கள் யுத்தத்தைத் தெரிவு செய்வது சிறிலங்கா வரலாற்றிற்குப் புதுமையானதாக இருக்க மாட்டாது.

# உரிமைகளைப் பெறுவதில் உறுதியாக உள்ள நாம் யுத்தம் திணிக்கப்படின் எதிர் கொள்ளத் தயார்

**தென்மராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியம்**

தமிழ் மக்களாகிய நாங்கள் இந்தத் தருணத்தில் சிறிலங்கா அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் கூறிக்கொள்ளும் செய்தி என்ன வெனில் எங்கள் உரிமைகளைப் பெறுவதில் உறுதியாக இருக்கும் எம்மீது யுத்தம் ஒன்று திணிக்கப்படுமேயா னால், தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றுபட்டு அதை எதிர் கொள்ளவும் தயாராக உள்ளோம். என்பதை இந்த மக்கள் எழுச்சிப் போராட்டத்தின் மூலம் எடுத்துக் காட்ட விரும்புகின்றோம்.

இவ்வாறு தென்மராட்சி பொது மக்களின் ஒன்றியம் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விற்கு, தென்மராட்சி பிரதேச செயலர் ஊடாக அனுப்பிவைத்த கடிதத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தின் விபரம் வருமாறு:- சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப்புலிகளின் தலைவருக்கும் இடையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டு மூன்று ஆண்டுகளாகின்றன. இவ் உடன்படிக்கையானது நீண்ட கால யுத்தத்தினால் பாதிப்படைந்த தமிழ் மக்கள் இயல்புவாழ்க்கையைக் கட்டியெழுப்புவது, பேச்சுவார்த்தைகளின் மூலம் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என்பவற்றைமையமாகக் கொண்டு சர்வதேச அனுசரணையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

மூன்று ஆண்டுகளாகியும் தமிழ்மக்களின் இயல்பு வாழ்வில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட வில்லை. இடம்பெயர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்ப முடியாது இன்னும் அகதிகளாக அலைகின்றனர். சொந்த நிலங்களில் விவசாயம் செய்ய முடியவில்லை. இராணுவக் கெடுபிடிகள் முன்னரைப்போலவே தொடருகின்றன. பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படாது காலம், வேண்டும் என்றே இழுத்தடிக்கப் படுகின்றது.

யுத்த நிறுத்த உடன்படிக் கையைப் பயன்படுத்தி இக்காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான சகல நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருவதாக மக்கள் உணர்ந்துள்ளனர். சிறிலங்கா அரசாங்கம் யுத்தத்திற்கான சகல தயாரிப்புக்களிலும் ஈடுபட்டு வருகின்றது. யுத்தவிமானங்கள், கப்பல்கள், தளபாடங்கள் மற்றும் ஆட்சேர்ப்பு என இராணுவக் கட்டமைப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளதை சர்வதேச, உள்ளூர் இராணுவ ஆய்வாளர்கள் புள்ளி விபரத்துடன் எடுத்துக் காட்டியுள்ளனர். மேலும் 2005 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் 7ஆயிரம் கோடி ரூபாவிற்கு மேல் பாதுகாப்புக்கென ஒதுக்கப் பட்டுள்ளது.அத்துடன் சிங்கள மக்களிடையே தமிழர் விரோதப் பரப்புரைகள் மிக மோசமாக முன்னெடுக்கப் படுகின்றன. ஜே.வி.பி, ஹெல உறுமயக் கட்சிகள் மட்டுமல்ல சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இந்த நடவடிக் கைகளில் ஈடுபட்டு வருகின்றன. அரச ஊடகங்கள் தமிழ் மக்களுக்கும், அவர்களின் ஏகபிரதிநிதி களான விடுதலைப் புலிகளுக்கும் எதிரான செய்திகளை திட்டமிட்டுப்பரப்பி வருகின்றன. மறுபுறத்தில் தமிழ் மக்களின் அரசியல் பேரம் பேசும் பலத்தைக் குறைக்கும் நடவடிக் கைகளை தமிழ் விரோதக் குழுக்கள் கனகச்சிதமாக மேற் கொண்டு வருகின்றன.

இதேவேளையில் சிறிலங்கா அரசானது தனது பாதுகாப்புப் படைகளையும் சிங்கள மக்களையும் யுத்தத்திற்குத் தயார்ப் படுத்தும் நடவடிக்கையில் முனைப் புடன் ஈடுபடுவதாகத் தமிழ்மக்கள் உணர்ந்துள்ளார்கள். கொடிய யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களை அடக்கி ஆள்வதே சிங்களப் பேரினவாதிகளின் அடிப்படை நோக்கம். இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து தமிழ் மக்கள் சனநாயக ரீதியாக அகிம்சை வழியில் நடாத்திய போராட்டங்கள் , அரச பயங்கர வாதிகளால் அடக்கப்பட்டன. தமிழ்த் தலைவர்கள் சிங்களத் தலைமைகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் அமுறப்படுத்தப் படாமல் இரத்துச் செய்யப்பட்டு, தமிழ்த்தலைவர்களும் தமிழ் மக்களும் தொடர்ச்சியாக சிங்களத் தலைமைகளினால் ஏமாற்றப்பட்ட வரலாற்றை நாம் அனைவரும் அறிவோம். அத் துடன் நின்று விடாமல் தமிழ் மக்கள் மீது இன வன்முறைகள் தொடர்ச்சியாக கட்டவிழ்த்து விடப்பட்டு. வகை தொகையாக கொன்றொழிக் கப்பட்ட வரலாற்றையும் நாம் அறிவோம். இந் நிலை யில்தான் தமிழ் தேசியத்தைப் பாது காப்பதற்காகத் தமிழர் தாயகத்தில் ஓர்ஆயுதப் போராட்டம் வெடித்தது.

தமிழர்களாகிய நாம் யுத்தத்தை வெறுக்கின்றோம். அதேவேளை எமது அரசியல் உரிமைகளைப் பெறுவதில் உறுதியாகவுள்ளோம். சமாதான வழியிலே அவ் உரிமைகளைப் பொறுவதற்கான பேச்சுக்களை நடாத்துவதற்கு தமிழினம் தயாராக இருக்கும். இவ்வேளையிலேயே மீண்டும் ஒரு யுத்தத்தை தமிழ்மக்கள் மீது திணிக்கும் சிறிலங்காஅரசின் நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக் கின்றோம்.

எனவே தமிழ்மக்களாகிய நாங்கள் இந்தத் தருணத்தில் சிறிலங்கா அரசிற்கும் ,சர்வதேச சமூகத்திற்கும் கூறிக்கொள்ளும் செய்தி என்னவெனில் எங்கள் உரிமைகளைப் பெறுவதில் உறுதியாக இருக்கும் எம்மீது யுத்தம் ஒன்று திணிக்கப்படுமேயானால், தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றுபட்டு அதை எதிர்கொள்ளவும் தயாராக உள்ளோம். என்பதை இந்த மக்கள் எழுச்சிப் போராட்டத்தின் மூலம் எடுத்துக் காட்ட விரும்புகின்றோம்.

எனவே இனியும் காலங் கடத்தாது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் தமிழ்மக்களின் ஏக பிரதிநிதி களான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்து தமிழ் மக்களுக்கு இயல்பு வாழ்க்கையையும், சமாதானத்தையும், கொண்டு வருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

**-மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில்-**

# வெள்ளப்பாதிப்பை பார்வையிடச்சென்ற பிரதமர் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்கவில்லை

வெள்ள நிவாரணம் வழங்குவது குறித்து ஆராய மட்டக் களப்பு, அம்பாறை மாவட்டங் களுக்குச்சென்ற சிறிலங்காப் பிரதமர் மகிந்தராஜபக்ஷ அங்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச்சென்று பார்வையிடாமல் திரும்பியுள்ளார். மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் வெள்ள அனர்த் தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்து ஆராய்வதற்காக சிறிலங்கா பிரதமர் மகிந்தராஜபக்ஷ நேற்று இம் மாவட்டங்களுக்கான விஜயத்தை மேற்கொண்டார்.

இவருடன்அமைச்சர் பேரியல் அஷ்ரப் உட்பட நிவாரணப் பணிகளுடன் தொடர்புடைய அதிகாரிகளும் சென்றிருந்தார்கள். உலங்குவானூர்தி மூலம் முதலில் அம்பாறைக்கு விஜயம் செய்த பிரதமர் மகிந்தராஜபக்ஷ, மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் ஹேரத் அபயவிக்கிரம தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட மாநாடொன்றில் கலந்துகொண்டார். இந்த மாநாட்டில் பிரதேசசெயலாளர்களும் கலந்துகொண்டு பாதிப்புகள் குறித்து விளக்கமளித்தனர். இம்மாவட்டத்தின் நிவாரணப் பணிகளுக்காக 17 மில்லியன் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனை ஒதுக்குமாறு திறைசேரியிடம் பிரதமர் கேட்டுள்ளார். அம்பாறை மாவட்டத்திற்கான விஜயத்தை முடித்துக் கொண்ட அவர், நேரடியாக அங்கிருந்துமட்டக்களப் பிற்குச்சென்றார். 23-2 ஆவது இராணுவப் படைப்பிரிவு தலைமையகத்தில் நிவாரணப்பணிகள் குறித்து அரசாங்கஅதிபர் வே.சண்முகம் மற்றும் பிரதேச செயலாளர் களுடன் ஆராய்ந்தார். இருப்பினும் இந்த இரண்டு மாவட்டங்களிலும் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களையோ அல்லதுபாதிக்கப்பட்ட மக்களையோ அவர்சென்று பார்வையிடவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# மாத்தறையில் பரவிய நோய் இன்புளுவன்ஸா வகை என அறிவிப்பு

இலங்கையின் மாத்தறை மற்றும் எம்பிலிப்பிட்டிய ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட மரணம் விளைவிக்கும் நோய் இன்புளுவன்ஸா ஏ மற்றும் இன்புளுவன்ஸா பி என அடையாளம் காணப்பட்டுள்ளது இந்த நோயின் காரணமாக இதுவரை 9 பேர் வரை மரணமாகியுள்ளனர். மேலும் பலர் இந்த நோயின் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர். இந்த நிலையில் இந்த நோய் சாள்ஸ் என்ற சந்தேகம் ஏற்பட்டிருந்த நிலையில் தற்சமயம் மருந்தால் குணப்படுத்தக்கூடிய நோயே இது எனத் தெரியவந்துள்ளமை பொதுமக்கள் மத்தியில் இருந்த அச்சத்தை நீக்கியுள்ளது. (32)

# தென்மராட்சியில் நடைபெற்ற மனிதச் சங்கிலிப் போராட்டம்






# கிராமப்புற மக்களின் வாழ்வை மேம்படுத்த முற்பட்டோம்!

### புலிகளின் திருமலை மாவட்ட தளபதி சொர்ணம் தெரிவிப்பு



தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு கிராமப்புற மக்களின் பங்களிப்புக் கூடுதலாக இருந்து வருகின்றது. ஆனால் அவர்களின் வாழ்க்கைத்தரம் தற்போதும் வறுமைக் கோட்டின் கீழேயே இருந்து வருகின்றது. இதற்காகவே நாங்கள் போராடுகின்றோம். இதனை நிவர்த்தி செய்வதற்காகவே சமாதானப் பேச்சுக்களுக்கு முன்வந்தோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்கள தலைவர்களை நேற்றுமுன்தினம் காலை கட்டைப்பறிச்சான் விபுலானந்தா வித்தியாலயத்தில் சந்தித்து திருகோணமலை மாவட்டத்தில் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்ட வேலைத திட்டங்கள், முடிவுறுத்தப்படாத வேலைத்திட்டங்கள் என்பன பற்றியும், அடுத்த ஆண்டு மேற்கொள்விருக்கும் வேலைத் திட்டங்கள் பற்றியும் கேட்டறிய அபிவிருத்தி புனரமைப்பு வேலைத்திட்ட ஆய்வரங்கு ஒன்றினை நடத்தினார்.

இந் நிகழ்வில் 65இற்கும் மேற்பட்ட அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர். கேணல் சொர்ணம் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றுகையில்,

இன்று போராட்ட பரிமாணம் மாறிவிட்டது. வெளிநாடுகளில் எம்மைப்பற்றி இருந்த நன்மதிப்பு கூடிக்கொண்டு வருகின்றது. எங்கள் பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இது உங்கள் அனைவரதும் கடமையாகும். மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படவேண்டும் இதற்கு மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். நகர மாற்றத்தைக் கொண்டு ஒரு சமூகம் முன்னேறியிருக்கின்றது என்று கருத முடியாது. வறுமைக் கோட்டிற்கு கீழ் மக்கள் இருக்கின்றார்கள். அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும். நாடு விடுதலை அடைய வேண்டும். இதற்காகவே பேச்சுவார்த்தை நடத்தப்படுகின்றது. மக்களது விடுதலை அவர்களது முன்னேற்ற வாழ்க்கையில் தங்கியிருக்கின்றது.

உங்களுக்கு என்று சில கடமைகள் இருக்கின்றன. மக்களது நல்வாழ்வு அபிவிருத்தி அடைய வேண்டும். இது அவர்களது எதிர் காலத்திலேயே தங்கியிருக்கின்றது. இதற்காக நீங்கள் அர்ப்பணிப்புடன் வேலை செய்ய வேண்டும். போர் நடக்கலாம், பேச்சுக்கள் தொடரலாம்.ஆனால்அபிவிருத்தி வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்றார்.

# விசுவமடு நகர்ப் பகுதியில் திரையரங்கு எரிந்து நாசம்

விசுவமடு நகர்ப்பகுதியிலிருந்த தனியாருக்குச் சொந்தமான திரையரங்கொன்று நேற்று முன்தினம் நள்ளிரவு தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது.

இத்திரையரங்கு எரிந்து கொண்டிருந்த வேளை அப்பகுதியால் இரவுக்காவல் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த காவல்துறையினர் அங்கு விரைந்து சென்று உள்ளிருந்த தொலைக்காட்சிப் பெட்டி ஒளிபரப்புச் சாதனங்கள் என்பவற்றை மீட்டுள்ளனர். திரையரங்கம் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. (வி)

## பிரதமர்....

படையின் தலைமை அலுவலகத்தில் உயர்மட்ட மாநாட்டை நடத்தினார். இந்த மாநாட்டுக்கு ஊடகவியலாளர்களை அனுமதிக்குமாறு மாவட்ட அரசாங்க அதிபர் வி.சண்முகம் கேட்டுக்கொண்டபோதும் அதற்கு படையினர் இணங்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது 233ஆவது படைப்பிரிவின் அலுவலக மண்டபம் வரையில் ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் திருப்பியனுப்பட்டுள்ளனர் இது தொடர்பில் ஊடகத்துறை பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் உரிய விசாரணைகள் நடைபெறும் என உறுதியளித்துள்ளார்.

## உந்துருளி...

வந்துகொண்டிருந்த உந்துருளியுமே நேருக்குநேர் மோதிக் கொண்டன.

இதன்போது துவிச்சக்கர வண்டியில் சென்ற கிளிநொச்சி கோணாவிலைச் சேர்ந்த முருகேசு கிருஸ்ணபிள்ளை (வயது 62) என்பவர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். அத்துடன் பிரதான வீதியில் ஏற்பட்ட இவ்விபத்தினால் போக்குவரத்துக்கள் சில நிமிடம் சிரமத்தின் மத்தியில் மேற்கொள்ளப்பட்டதை அவதானிக்க முடிந்தது. (கு,தீ)

## வீரச்சாவு...

பொலிகண்டி, வல்வெட்டித்துறை, யாழ்)என்பவரே வீரச்சாவடைந்தவராவார். இவருக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்.

## கிழக்கு....

யும் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுசரணையோடு அமைக்கப்பட்ட 9 பேர் அடங்கிய இச்செயற்குழுவானது 43/3 ஆம் குறுக்குத்தெருவில் தனது செயலகத்தை அமைத்து இயங்கிவருவதோடு, உணவுப் பொருட்கள், பால்மா வகைகள், மருந்து வகைகள், சிறுவர்களுக்கான புதிய உடைகள் போன்ற பொருட்களை,பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து சேகரித்து கிழக்கிற்கு கொண்டு சென்று விநியோகிப்பதையே நோக்காகக்கொண்டு இயங்கவுள்ளது.

சேரிக்கப்பட்ட பொருட்களை 25.12.2004 ஆம் நாள் கிழக்கிற்குக் கொண்டுசெல்லப்படவுள்ளதால் இப்பணிக்கு அனைத்து மக்களையும் பங்களிப்புச் செய்யுமாறு இக்குழுவினர் கேட்டுள்ளனர். (41)

## இராணுவ...

குவிக்கப்பட்டு வருவதுடன் கனரக போர்த் தளபாடங்களும், ஆயுதங்களும் கடந்த சில வாரங்களாக வாகனங்களில் முகாம்களுக்கு கொண்டு வரப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுத்த ஆயத்த நடவடிக்கைகளில் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருவதுடன் இப்பகுதியில் உள்ள பிரதான சாலையும் படையினரின் பயிற்சித் தளமாக மாறி வருவதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். படைகுவிப்பு-ஆயுதகுவிப்பு-பயிற்சி நடவடிக்கைகள்-காவல் அரண்கள் புதுப்பித்தல் என இப் பிரதேசமே இராணுவ மயமாக மாறிக் கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (28)

## புலிகள்...

எனப் பலரும் கலந்து கொண்டார்கள். கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியின்போது விடுதலைப் புலிகளுக்கும் நோர்வேயின் முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க்கிற்கும் இடையில் இடம்பெற்ற தொலைபேசி உரையாடல் மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹொவ்டேயுடன் இடம்பெற்ற உரையாடல் போன்றன ஒட்டுக் கேட்கப்பட்டு ஒலிப்பதிவு செய்யப்பட்ட நாடா ஒன்று போட்டுக் காண்பிக்கப்பட்டது. இது எவ்வாறு கிடைத்தது என்பது குறித்து இராஜதந்திர வட்டாரங்கள் உப்படப் பல்வேறு தரப்பினரும் வினா எழுப்பியதோடு ஆச்சரியமடைந்துள்ளார்கள். இது தொடர்பாக மாநாட்டு ஏற்பாட்டாளர்களில் ஒருவரான சுசிந்த குணதிலக்க கருத்து தெரிவிக்கையில், இந்த உரையாடல் விடயம் அம்பலமாகியது புதிய விடயம் அல்ல என்றும், இது 6 மாதங்களுக்கு முன்பு ஆங்கிலப் பத்திரிகையொன்றில் வெளியாகியிருந்தது. இங்கிலாந்திலுள்ள இந்திய அமைப்பொன்றின் ஊடாகவே இந்த ஒலிப்பதிவு நாடா வெளியாகியுள்ளது. அதுவே எமக்குக்கிடைத்தது. அதனையே நாம் பயன்படுத்தினோம். இதிலிருந்து இந்தியாவின் தலையீடு இருப்பது தெரியவருகின்றது. தொலைபேசி உரையாடலை அம்பலப்படுத்துவது சனநாயகத்திற்கு விரோதமான செயல் அல்ல என்றும் கூறியுள்ளார்.

## புலிகளுக்கு....

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வானொலிக் கருவிகளைத் தருவித்தமை மற்றும் நிதியுதவி வழங்கியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் கடந்த 18 ஆம் திகதி நோர்வேயின் அமைப்பு ஒன்றினால் வெளிக்கொணரப்பட்டதன் அடிப்படையிலேயே இதனை கோருவதாக அத்துரலியே ரத்தினதேரர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (32)

## சமாதான....

பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் இதனை முன்நின்று நடத்தியது.

நாங்கள் இடைக்கால நிர்வாகம் கேட்டுக் கடந்த 3வருடங்களாகிவிட்டது. ஆனால் எமது மக்களுக்கு இயல்பு வாழ்க்கை இன்னமும் கிடைக்கவில்லை. எனவே இதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே இந்தப் போராட்டம் ஆரம்பமானது.

இந்தப் போராட்டம் தொடர்ச்சியாகப் பல்வேறு இடங்களுக்கும் முன்னெடுத்துச் செல்லப்படவுள்ளது.

இதன்போது சனாதிபதிக்கு மனு ஒன்றும் கொடுக்கப்பட்டது. அதேவேளை இதன் பிரதிகள் தூதராலயங்களுக்கும் தனித்தனியாக அனுப்பிவைக்கப்படவுள்ளன.

மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் இன்று ஓரளவிற்கு சர்வதேசத்தை எங்கள் பால் திருப்பியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கூட இராஜதந்திர ரீதியாக அனைத்துத் தூதராலயங்களுக்கும் சென்று தமிழ்மக்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்திக் கொண்டு வருகிறார்கள்.

இதேவேளை விடுதலைப்புலிகள் அமைப்பும் பல்வேறு நாடுகளுக்கும் சென்று தமது நிலைப்பாட்டை விளங்கப்படுத்திக் கொண்டு வருகிறார்கள்.

இதனால் சர்வதேச ரீதியாக ஒருமாற்றம் வருவதை நாங்களும் அவதானிக்கின்றோம். இதற்கு உதாரணமாக ஒன்றைக் குறிப்பிடலாம்.

அதாவது அண்மையில் இந்த நிதிவழங்கும் நாடுகள் ஜே.வி.பி யின் போக்குச் சம்பந்தமாகக் கடும் விசனத்தைத்தெரிவித்துள்ளார்கள்.

அதற்கு ஜே.வி.பி விடுத்த பதில் அறிக்கைக்கும் ஜப்பான் கடும் விசனத்தைத் தெரிவித்ததுடன் தமிழ் மக்களுக்குஇடைக்கால நிர்வாகம் அத்தியாவசியமாகத் தேவை. அந்த அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் எனவும் அது கூறியுள்ளது.

அத்தோடு இலங்கைக்கு நிதி வழங்கும் நாடுகள் அந்த நிதியை வழங்கல் தொடர்பாக இன்றும் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கப்போவதாக அறிகின்றோம்.இதற்கெல்லாம் காரணம் நாங்கள் போராட்டத்தை முன்னெடுத்து மக்களின் குரலை உலகமெங்கும் பரவச்செய்தமையினாலேயே.

இந்தவகையில் நாங்கள் ஒரு தளம் அமைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மனித சங்கிலிப் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது. இதனால் எவ்வித பயனும் ஏற்படாதுவிட்டால் எமது மக்கள் தொடர்ந்தும் பொறுமையாக இருக்கமாட்டார்கள்.

எங்களிடம் ஏற்கனவே ஒரு பிரதேசம் இருக்கிறது. ஒருநிர்வாகம் இருக்கிறது. எங்களுக்கென ஓர் இராணுவம் இருக்கின்றது. ஒரு காவல்துறை இருக்கின்றது. எங்களுக்கென ஒரு சட்டம் நடவடிக்கை இருக்கின்றது. மனித உரிமைகள் அமைப்பும் இருக்கின்றது. ஒரு அரசை அமைப்பது தான் நாங்கள் செய்ய முடியும் என்றார்.


# சாவு அறிவித்தல்

## அமரர் கணபதிப்பிள்ளை நடராசா

### [முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்]

வசாவிளான் தெற்கைப் பிறப்பிடமாகவும், தற்போது கனகபுரம் 39, 6/cஆம் பண்ணை, கிளிநொச்சியில் வசித்துவந்தவருமாகிய கணபதிப்பிள்ளை நடராசா என்பவர் நேற்று 20.12.2004 காலமானார். அன்னார் நிர்மலேஸ்வரியின் அன்புக் கணவரும், ரதிமலர், ரவிச்சந்திரன், ரகுராமன்(மாவீரர் கப்டன் முருகமூர்த்தி), ரவிசங்கர் (மாவீரர் 2ஆம் லெப்.மதிமாறன் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி) ரஞ்சிதமலர், ஜாமினி, ரமேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகராசா, தமிழ்ச்செல்வன், விஜிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரியங்கா, டினேஸ், சாலோபன், சாரங்கன், கோபிதாஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (21.12.2004) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கனகபுரம் பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(5425)

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது